ஆனந்தா ஊடக உலகம்

# ஆனந்த கங்கைத் தூது

ஜூன் 2026
மலர் : 20
இதழ் : 05
₹15

# கல்வியே செல்வம்

"உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க!
அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக்
கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப்
போற்றிப் புகழ்வார்கள்."
மத் 5: 16




Scanned with OKEN Scanner

# ஆனந்த கங்கைதூது

சிவகங்கை மறைமாவட்ட மாத இதழ்

## நீங்களும் சந்தாதாரராகுங்கள் . . .

தங்கள் இல்லங்களில் நடைபெறும்
பிறந்த நாள், திருமணநாள் கொண்டாட்டங்கள்,
நீத்தார் நினைவுகள், ஊர் திருவிழாக்கள்,
மற்றும் பிற விழாக்கள் நிகழ்வுகள் அனைத்தையும்
நமது இதழில் விளம்பரப்படுத்தி பயன்பெறுங்கள்.









ஊர்த்திருவிழாக்கள், பங்குத் திருவிழாக்கள்,
பள்ளி ஆண்டு விழா, ஆசிரியர் பணி நிறைவு விழா,
குருத்துவ, துறவற பொன் மற்றும் வெள்ளி விழாக்கள்,
ஆகிய நிகழ்வுகள் அனைத்தையும்
**Ananda Youtube** நேரலையில் ஒலிபரப்பு செய்யப்படும்.

தொடர்புக்கு

**8883877416**

வருடந்தோறும் சந்தாவைப் புதுப்பித்து
உங்களுக்கான இதழைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளுங்கள்

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 03 |  | ஆசிரியரிடமிருந்து... |
| 05 |  | ஆய்வும் சுயஆய்வும் — குறுகிய மனநிலையும் கல்வியும் — அருள்பணி. ஜெ. மரிய அந்தோணி |
| 07 |  | இம்மாதச் சிறப்பு — இயேசுவின் திரு இருதயம் மன்னிப்பின் சிகரம் இரக்கத்தின் அடையாளம் — அருள்பணி. லூர்துராஜ் |
| 11 |  | நலவாழ்வு — கல்வியும் உடல் நலமும் — அருள்சகோதரி. லடிஸ்கா |
| 13 |  | சிந்தனைப் பகுதி — கல்வியே செல்வம் — திரு. ச. ஜெயராஜ் |
| 15 |  | கவிதைப் பகுதி — வெற்றியின் வெளிச்சம் — கவிஞர். எல். பிரைட் |
| 16 |  | வாழ்வியல் செய்தி — விவிலியப் பார்வையில் ஒழுக்கமும் கல்வியும் — மாரா |
| 19 |  | சட்ட அறிவுப் பகுதி — கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும் — திரு. S. அருள் ஜெயராஜ் |
| 21 |  | வாழ்வியல் செய்தி — வாழ்வாங்கு வாழ கல்வியைக் கற்போம் — அருள்சகோதரி. ஜெனஸ் |
| 23 |  | வழிகாட்டி பகுதி — கண்ணில் ஒளியாய் கனவுகளை நினைவாக்கும் கல்விச் செல்வம் — அருள்பணி. பிலோமோன் திச |





**வெளியிடுபவர்**

மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம்** D.D.,Ph.D.,Dr.Theol.
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

**ஆசிரியர்**

அருள்பணி. **மெக்கன்றோ ஜோ**

**ஆசிரியர் குழு**

அருள்பணி. **S. செபஸ்தி**
அருள்முனைவர். **R. மரிய டெல்லஸ்**
அருள்முனைவர். **M.R. சேசு**
முனைவர். **ஸ்டீபன் மிக்கேல்ராஜ்**
திரு. **சோமசுந்தர பாரதி**

**ஆலோசகர்கள் குழு**

அருள்பணி. **A. சிங்கராயர்**
அருள்சகோ. **அகஸ்டின்**
திரு. **வெட்டிவயல் வளவன்**
திரு. **அலெக்ஸாண்டர்**
திரு. **வியாகுல சந்தியாகு**
திருமதி. **மேரி பாரதி**

**அலுவலகம்**

**ஆனந்த கங்கைத் தூது**
வியான்னி அருள்பணி மையம்
மதுரை சாலை, சிவகங்கை - 630 561

**தொடர்புக்கு**

மாதா டிவி : 8883877416
கங்கைத் தூது : 8883877416
மின்னஞ்சல் : anandacommunicationsvg&gmail.com
அலுவலக நேரம் : காலை 9.30 - மாலை 4.30 வரை

**சந்தா விபரம்**

ஆண்டு சந்தா - ₹ 150
ஆயுள் சந்தா ( 12 ஆண்டுகள் ) - ₹ 1,500



**விளம்பரக் கட்டணம்**

பின்பக்க அட்டை - ₹ 6,000
அட்டை உள்பக்கம் - ₹ 5,000
முழு பக்கம் - ₹ 3,000
அரைப்பக்கம் - ₹ 1,500


உங்கள் மேலான படைப்புகள் வந்துசேரவேண்டிய கடைசி நாள்
**15.06.2026**

**ஜூலை மாத தலைப்பு**
**"இளமையில் இறைமை"**

**இதழ் சந்தா / மாதா தொலைக்காட்சி நன்கொடையினை வங்கியில் செலுத்த**

Bank Name : Canara Bank, Sivagangai
Account Name : Communication Commission
A/c. No. : 5157101011835
IFS Code : CNRB0005157

குறிப்பு: தங்கள் சந்தாவினை புதுப்பிப்பவர்கள் பெயர், சந்தா எண், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். வங்கியில் செலுத்துபவர்கள் விபரங்களை SMS செய்யவும்.

Scanned with OKEN Scanner

# ஆயரின் பயணத்திட்டம்

ஜுன் 01 ம் தேதி முதல் ஜுலை 02 வரை

மேய்ப்புப் பணி பயணம் - ஐரோப்பிய நாடுகள்

## வாழ்த்துகிறோம் . . .



அன்பிற்குரிய ஆனந்த கங்கை தூதுவின் வாசகர்களே மற்றும் மாதா தொலைக்காட்சி நேயர்களே, அனைவருக்கும் வணக்கம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மறைமாவட்ட ஊடகப் பணிக்குழுவின் செயலராகவும் மாதா தொலைக்காட்சியின் ஒருங்கிணைப்பாளராகவும் அருள்பணி. **எட்வர்ட்** அவர்கள் ஆர்வத்தோடும் விவேகத்தோடும் அர்ப்பண உணர்வோடும் செயல்பட்டு நமது மறைமாவட்ட ஊடகப் பணியின் வளர்ச்சியிலும் மாதா தொலைக்காட்சியின் வளர்ச்சியிலும் பங்கெடுத்திருக்கிறார்கள். அருள்தந்தை ஆற்றிய சிறந்த பணிகளுக்காக நன்றி கூறுகிறேன். தொடர்ந்து அவருடைய பணி சிறக்க செபிக்கிறேன். நீங்களும் செபிக்க அன்போடு வேண்டுகிறேன்.

ஆனந்த கங்கை தூது மற்றும் மாதா தொலைக்காட்சி வழியாக இயேசுவின் இறையாட்சி பணியை செம்மண் பூமியில் தொடர்ந்து ஆற்றிட உங்களுடைய ஒத்துழைப்பை வேண்டுகிறேன். ஆனந்த கங்கை தூது, மாதா தொலைக்காட்சி மற்றும் பணிக்குழு சார்ந்த அனைத்து தகவல்களுக்கும் என்னை அணுகுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.



*இயேசுவின் அன்பில்*

அருள்பணி. **மெக்கன்றோ ஜோ**

அலைபேசி : 88838 77416

# ஆனந்த கங்கை தூதுவிடமிருந்து...

*அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய வணக்கம்!*

ஒரு நிமிடம், கண்களை மூடி கற்பனை செய்து பாருங்கள்.

**ஒரு பக்கம்,**

இரும்புப் பெட்டி. பெரிய பூட்டுகள். இரவும் பகலும் காவல் செய்ய காவலர்கள். உள்ளே தங்கம், வைரம், பணக் கட்டுகள். ஒருநாள் திருடன் வருகிறான். பெட்டி உடைக்கப்படுகிறது. எல்லாம் பறிபோகிறது. உரிமையாளர் கையை விரித்துப் பார்க்கிறார். வெறும் கை – வேதனையில் மனம் – சோதனையில் வாழ்வு.

**மறு பக்கம்,**

ஒரு புத்தகம், பழைய முகப்பு அட்டை, கிழிந்த ஓரங்கள். அதன் உரிமையாளர் படித்த கலைப்பில் ஒரு மூலையில் அமைதியாக, நிம்மதியாக உறங்குகிறார். பூட்டும் இல்லை, காவலரும் இல்லை. மனதில் புத்தகம் விதைத்த கவிதைகள், உண்மைகள், புதிய சிந்தனைகள். திருடன் வந்தால் என்ன செய்வான்? ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில், அறிவைத் திருட முடியுமா? கற்றதைப் பறித்துச் செல்ல முடியுமா?

இதனால்தான் திருவள்ளுவர்,

"**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்ற யவை**" என்கிறார்.

அழிவில்லாத செல்வம், திருட முடியாத செல்வம், பகிர்ந்தால் குறையாத, மேலும் மேலும் பெருகும் ஒப்பற்ற செல்வம் – **கல்வி!**

**ஆனால் இன்று,**

கல்வி என்னும் பொற்கிண்ணம் கையிலிருந்து நழுவி, வியாபாரத்தின் சேற்றில் வீழ்ந்து விலைபோய்க் கொண்டிருக்கின்றன (நீட் வினாத்தாள் விற்பனை செய்த பேராசிரியர் கைது). பள்ளி, கல்லூரிக் கூடங்களும், பல்கலைக்கழகங்களும் அறிவாலயங்களாக இருப்பதை நிறுத்திவிட்டன. அவை இன்று, பல இடங்களில் – இலாபக் கணக்குகள் கணக்கிடும் வணிக நிறுவனங்களாக, உயர்வு – தாழ்வு (Status) காட்டும் பாகுபாட்டு அமைப்புகளாக மாறிவிட்டன (என் புள்ளையை இவ்வளவு இலட்சம் கட்டி இந்த பள்ளியிலதான் படிக்க வைப்பேன் இல்லைனா என் ஸ்டேடஸ் என்ன ஆகுறது). சான்றிதழ்கள் திறமையின் அடையாளமாய் இல்லாமல், பணத்தின் கையெழுத்துப் பத்திரங்களாக ஊழலை விதைக்கின்றன (தற்போதைய கல்வி அமைச்சரின் போலி கல்விச் சான்றிதழ்). "படிக்கவில்லையா? நீ ஒன்னத்துக்கும் இலாயக்கு இல்லை" என்று விளம்பரங்கள் விஷத்தைத் தெளிக்கின்றன.

பணக்காரப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு விமானத்தில் அனுப்புகிறார்கள். ஏழை மேதைகள் இன்னும் தெருவிளக்குத் தூணின் கீழ், மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில், கொசுக் கடியில் தங்கள் கனவுகளைக் காக்கிறார்கள்.

இந்த இருளில், "**கல்வியே செல்வம்**" என்பது ஒரு பழைய புராணமாகத் தோன்றலாம். ஆனால், உண்மையை உற்றுப் பாருங்கள். அது இன்னும் துள்ளிக் குதித்துக்கொண்டுதான் இருக்கிறது.

இராமேஸ்வரத்தில் செய்தித்தாள் விற்று, கல்வி கற்ற ஏழைச்சிறுவன் – பின்னாளில் இந்திய விண்வெளி ஆயுதங்களை வடிவமைத்த வல்லுநர், பாரத ரத்னா விருது பெற்ற அறிஞர், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் – **Dr. A.P.J. அப்துல் கலாம்.**

பாட்னாவில் மண்ணெண்ணெய் விளக்கில் படித்த பட்டியல் இன மாணவன் – பின்னாளில் புகழ் பெற்ற கணித மேதை, சிறந்த கல்வியாளர். ஆசியாவில் சிறந்த கல்வித் திட்டம் என்று அங்கிகரிக்கப்பட்ட "சூப்பர் 30" தொடங்கி, ஆண்டுக்கு 30 ஏழை மாணவர்களுக்கு – இலவச உணவு, தங்குமிடம் மற்றும் ஐ.ஐ.டி யில் கல்வி என்று வெற்றியாளர்களை உருவாக்கும் உத்தமர். பத்மஸ்ரீ விருது பெற்ற சாதனையாளர் – திரு. **ஆனந்த் குமார்.**

கர்நாடகாவில் ஷிகோடி என்னும் சிற்றூரில் பிறந்தவர். கல்வியில் ஆர்வம் கொண்டு போராடி பொறியியல் படித்தவர். டாட்டா (TATA) நிறுவனத்தின் முதல் பெண் பொறியாளர். இன்ஃபோசிஸ் அறக்கட்டளையின் தலைவி. பத்மஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் விருதுபெற்ற மேதை – திருமதி. **சுதா மூர்த்தி**

இவர்கள் யாரும் பணத்திற்காகப் படிக்கவில்லை, ஊழலுக்காகக் கற்கவில்லை, விளம்பரத்திற்காக திறமையை வளர்க்கவில்லை. ஒளிவீசக் கற்றார்கள். விடிவுக்காகக் கற்றார்கள். அவர்கள் இன்றும் நம் மனதில் ஒளிமயமான சுடர்களாக நிற்கிறார்கள்.

**கல்வி ஆக்குகிறது:**

ஒரு மனிதனை மாமனிதனாக்குகிறது. ஒவ்வொரு புதிய சிந்தனையும், அறிவும் தன்னம்பிக்கையைத் தருகிறது. அவனைப் புனிதனாக்குகிறது. தீமையை எதிர்க்கும் வீரமும், நன்மையைக் காக்கும் பண்பும் அவனுள் முளைக்கின்றன.

**கல்வி காக்கிறது:**

நம் கலாச்சாரத்தை, நம் பண்பாட்டை, வாய்மையை, சமத்துவத்தை, நேர்மையை காக்கிறது. ஒரு சமூகம் கற்கும்போது அதன் வேர்கள் பலப்படுகின்றன. அதன் நெறிகள் அழியாமல் நிற்கின்றன.

**கல்வி அழிக்கிறது:**

அறியாமையின் இருளை, மடமையை, மூடநம்பிக்கையை, வறுமையின் சங்கிலியை, சாதியின் பார்வையிழந்த வெறியை, "என்னால் முடியாது" என்ற அச்சத்தை வேரோடு அழிக்கிறது.

இன்று நம் முன் இரண்டு பாதைகள்

**முதல் பாதை**

கல்வியை பொருளாகப் பார்ப்பது – விலை பேசுவது, வாங்குவது, விற்பது, சான்றிதழ்களை அடுக்கி வைப்பது. இப்பாதை செல்வத்தைக் கொடுக்கும். ஆனால் அது வெறும் கையில் ஒரு பொன்னிறச் சங்கிலி – பளபளக்கும் ஆனால் சிறைப்படுத்தும்.

**இரண்டாவது பாதை**

கல்வியை செல்வமாகப் பார்ப்பது – அது நம்மை ஒருபோதும் விட்டுப் பிரியாது. பொருளாதாரப் புயலில் அது கரையாது. திருடர்கள் அதை நெருங்கவும் முடியாது. நமது கடைசி மூச்சுவரை அது கைகொடுத்து நிற்கும். நாம் மரணித்தப் பிறகும் அது நம் பிள்ளைகளுக்குச் சொத்தாக நிற்கும்.

**நாம் எதைத் தேர்ந்தெடுப்பது?**

**சிந்தியுங்கள். பிறகு, செயல்படுங்கள்.**

விளம்பரங்களைக் கேள்வி கேளுங்கள். ஊழலைக் கண்டு மயங்காதீர்கள். பொய்க் கல்வியைப் பூட்டி வைத்துவிட்டு, உண்மைக் கல்வியைத் தேடிச் செல்லுங்கள். ஒவ்வொரு நாளும் இருபது நிமிடமாவது வாசியுங்கள். ஒரு புதிய சொல்லைக் கற்றுக்கொள்ளுங்கள். ஒரு புதிய துறையின் கதவைத் தட்டுங்கள். அறியாமையின் ஒரு சிறு மூலையையாவது இன்று ஒழித்துவிடுங்கள். மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். உங்கள் அறிவைப் பகிருங்கள். ஏனெனில், பணம் கரையும், பொன் மறையும். புகழ் மங்கும். கல்வி மட்டுமே மனிதனை மாமனிதனாக்கும் உண்மைச் செல்வம். கல்வி மட்டுமே கேடில்லாப் பெரும் செல்வம்.

இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் உங்கள் வாழ்க்கைச் செல்வத்தைப் பெருக்கும் ஒரு பொற்கிண்ணமாக அமையட்டும்.

**படியுங்கள்; உயருங்கள்; உயர்த்துங்கள்..!**

இயேசுவின் அன்பில்
அருட்பணி. **மெக்கன்றோ ஜோ**
செயலர், ஊடகப் பணிக்குழு,
சிவகங்கை மறைமாவட்டம்.



Scanned with OKEN Scanner




# குறுகிய மனநிலையும் கல்வியும்

அருள்பணி. **ஜெ. மரிய அந்தோனி**
சிவகங்கை மறைமாவட்டம்

**ஆய்வு:**

2010ஆம் ஆண்டு அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆய்வு இது!

ஆய்வுக்குழுவினர் ஒரு வெள்ளை இன இளைஞனையும் ஒரு கருப்பின இளைஞனையும் தங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தினர். இருவரின் வேலை என்னவென்றால் பொது இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற இரு சக்கர வாகனங்களை (சைக்கிள்களை) திருடுவது போல நடிப்பது! கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் சைக்கிள்களை ரம்பத்தைக் கொண்டு அறுப்பது, நட்டுக்களைத் தளர்த்தி வண்டியை எடுக்க முனைவது... போன்ற காரியங்களை பலரும் பார்க்கும் வகையில் இவர்கள் செய்ய வேண்டும். இதைப் பார்ப்பவர்கள் எத்தகைய மனநிலையோடு இவர்களை அணுகுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் நோக்கம்

ஆய்வு முடிவுகள் மனித மனநிலைகளை படம் போட்டு காண்பித்தன! வெள்ளை இன இளைஞன் சைக்கிளைத் திருட முயற்சித்தபோது அதைப் பார்த்த யாரும் அதை 'திருட்டு' என்றுகூட கருதவில்லை. 'அவன் தனது வண்டியை எடுக்க முனைகின்றான்' என்றே பலரும் நினைத்தனர். நூறு பேர்களில் ஒருவருக்கு மட்டுமே அவன் திருடனாக இருப்பானோ என்ற சந்தேகம் வந்தது. இவன் சைக்களின் பூட்டை உடைப்பதற்கு பல்வேறு வகைகளில் முயற்சி எடுப்பதைப் பார்த்து, "இது உங்களது வண்டிதானா?" என்ற கேள்வியை ஒரு சிலர் கேட்டனர். இவன் "இல்லை" என்ற பதிலைத் தந்தபோது கூட, அவர்கள் அதைக் கிண்டலாகத்தான் எடுத்துக் கொண்டனர்

ஆனால் கருப்பின இளைஞன் அதே போன்ற காரியத்தைச் செய்த போது, அதாவது திருடுவது போல நடித்த போது, உடனடியாக பெரிய கூட்டம் அவனைச் சுற்றி கூடியது. கேள்விகளால் அவனை அவர்கள் துளைக்க ஆரம்பித்தனர். சிலர் காவல்துறைக்குக்கூட தொலைபேசி செய்தனர். இந்த ஆய்வை ஆய்வாளர்கள் வேறு வேறு நகரங்களில் நடத்திய போது ஏறத்தாழ இதே போன்றே நடந்தது.

ஆய்வு இன்னும் முடியவில்லை! ஆய்வாளர்கள் அடுத்து ஒரு வெள்ளையின இளம்பெண்ணை (blonde) இதே போன்ற திருட முயற்சிக்கின்ற காரியத்தைச் செய்யச் செய்தனர். யாருமே அந்தப் பெண்ணைச் சந்தேகப்படாதது மட்டுமல்ல, அப்பெண்ணுக்கு உதவியும் செய்ய முனைந்தார்களாம்.

**சுய ஆய்வு:**

"இவன் சிகப்பாக இருக்கின்றான். எனவே பொய் சொல்ல மாட்டான்" என்ற திரைப்பட



Scanned with OKEN Scanner

**ஆனந்த கங்கைதூது**

நகைச்சுவை பலரும் அறிந்த ஒன்று! தோலின் நிறம் பிறப்பிலிருந்து வருவது, உள்ளிருக்கும் குணம் ஒருவர் தன் முயற்சியால் உருவாக்கிக் கொள்வது. இரண்டும் வேறுவேறு என்றாலும், பல நபர்கள் இரண்டுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக நினைத்து அதன் அடிப்படையில் சகமனிதர்களை முத்திரை குத்தி அவர்களது வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றனர். வெளிநாடுகளில் இனத்தின் அடிப்படையிலான இந்தத் தீமை, நமது நாட்டில் சாதியின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. இத்தகைய அவலம் மனிதமனதின் முதிர்ச்சியற்ற தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. முதிர்ச்சியடைந்த மனிதர்கள் என்பவர்கள் ஒரு மனிதரை அவரது குணங்களின் அடிப்படையில்தான் எடைபோடுவார்களே தவிர, புற காரணிகளான இனம், சாதி போன்றவற்றை வைத்து அல்ல!

**உளவியல் ஆய்வு**

நமக்கு வழங்கப்படும் கல்வியின் நோக்கம் மனித மனத்தின் குறுகலான, இறுகிய தன்மைகளை உடைத்து பரந்துவிரிந்த பார்வையைத் தருவது. கல்வி ஒரு மனிதரது வாழ்வின் தரத்தையும் தளத்தையும் உயர்த்த வல்லது என்ற காரணத்தாலேயே அதை 'செல்வம்' என்று அழைக்கிறோம். (செல்வம் என்பது நம் வாழ்வை உயர்த்துகின்ற ஒன்று). வள்ளுவர்கூட கல்விக்கென்று தனி அதிகாரம் ஒன்றை வைத்திருப்பதோடு "கண்ணுடையார் என்பவர் கற்றோர், முகத்துஇரண்டு புண்ணுடையார் கல்லாதவர்' என்று சொல்லியிருக்கிறார். எனினும் இன்றைய கல்வி மனிதர்களின் மனத்தைப் பண்படுத்துவதைவிட, அவர்களை மதிப்பெண் இயந்திரங்களாக மாற்றிக்கொண்டிருப்பது வேதனையான ஒன்று மட்டுமல்ல, கவலைக்குரிய ஒன்றும்கூட!

# 80 சமூக அக்கறையும் கல்வியும்

**ஆய்வு:**

2014ஆம் ஆண்டு ஸ்வீடன் நாட்டில் செய்யப்பட்ட ஆய்வு இது!

பெரிய பெரிய விடுதிகள் மற்றும் மாடி கட்டிடங்களில் இருக்கும் லிஃப்டுகளில் ஒரு ஆண் தனது மனைவியை மோசமாகத் திட்டுவதும் அடிப்பதுமான காட்சிகளை ஆய்வுக் குழுவினர் அரங்கேற்றினர். இது நடிப்புத்தான் என்றாலும் இதைச் செய்த ஆய்வு குழுவினர் உண்மையான இயல்பான காட்சி போல தோன்றும்படி பார்த்துக் கொண்டனர். பொது இடங்களில் நடைபெறும் இத்தகைய மோசமான செயல்பாடுகளை, பொதுமக்களில் எத்தனை பேர் கண்டித்து அதை தடுக்க முன் வருகிறார்கள் என்பதை அறிவதற்கான ஆய்வு இது!

பெரிய ஆச்சரியம் என்னவென்றால் பொது இடங்களில் கணவன் தன் மனைவி மட்டில் எவ்வளவுதான் மோசமாக நடந்து கொண்டாலும், அதை கண்டிக்க பலரும் முன்வரவில்லை. 53 நபர்களில் ஒரு நபர் மட்டுமே அதைத் தடுக்க முனைந்தார்களாம்.

**சுயஆய்வு:**

மேற்கூறப்பட்டதுபோன்ற நிகழ்வுகள், அதாவது கணவன் தன் மனைவியை அடிப்பதுபோன்ற நிகழ்வுகள், நம் நாட்டில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் நடப்பதாக எண்ணிக்கொள்வோம். கிராமப்புறத்தில் நடக்கும்போது, அதில் தலையிட்டு கணவனைக் கண்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

இத்தகைய செயலைச் செய்பவர்கள் பெரும்பாலும் படிக்காதவர்களாக இருப்பார்கள். நகர்ப்புறத்திலோ 'நமக்கு ஏன் வம்பு?' என்று ஒதுங்கிப்போகின்றவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும். இதில் நிச்சயமாக அதிகமாக படித்தவர்கள் இருப்பார்கள். இதுதான் இன்றைய கல்விமுறை நமக்கு வழங்கியிருக்கும் பரிசு! நம் கல்விமுறை மனிதர்களை சுயநலவாதிகளாகவும், சமூக அக்கறையற்றவர்களாகவும் மாற்றிக்கொண்டிருக்கிறது. இது கல்விமுறையின் பிரச்சனை என்று சொல்வதைவிட, கல்விமுறை மட்டிலான நம் அணுகுமுறையில் உள்ள பிரச்சனை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமானது.



Scanned with OKEN Scanner



# இயேசுவின் திரு இருதயம்
# மன்னிப்பின் சிகரம் இரக்கத்தின் அடையாளம்
## ஒரு பார்வை

அருள்பணி. லூர்துராஜ்
பங்குத்தந்தை, சருகணி

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் அன்பு, மன்னிப்பு, இரக்கம் ஆகியவை மிக உயர்ந்த பண்புகளாகக் கருதப்படுகின்றன. உலகில் பல தலைவர்கள், ஞானிகள், இறைவாக்கினர்கள் அன்பைப் பற்றி போதித்துள்ளனர். ஆனால் மன்னிப்பையும், இரக்கத்தையும் தனது வாழ்க்கை முழுவதும் செயலால் காட்டியவர் இயேசு கிறிஸ்து. அவருடைய திரு இருதயம் மனிதனை நேசிக்கும் இறையன்பின் ஆழமான அடையாளமாகக் கருதப்படுகிறது.

திரு இருதய பக்தி வெறும் பக்தி வழக்கம் மட்டுமல்ல. அது மனிதனின் மனதை மாற்றும் ஆன்மீக அழைப்பாகும். இயேசுவின் இருதயம் மனிதனின் துன்பத்தை உணரும் இரக்க இதயமாகவும், தவறு செய்தவரையும் மன்னிக்கும் கருணை இதயமாகவும் வெளிப்படுகிறது. இதனால் திரு இருதயம் உலக மக்களுக்கு நம்பிக்கை, சமாதானம் மற்றும் அன்பின் அடையாளமாக விளங்குகிறது.

இக்கட்டுரையில் இயேசுவின் திரு இருதயம் மன்னிப்பும், இரக்கமும் நிறைந்த அன்பின் அடையாளமாக எவ்வாறு விளங்குகிறது என்பதை விரிவாகப் பார்ப்போம்.

**1. திரு இருதயம் என்றால் என்ன?**

திரு இருதயம் என்பது இயேசு கிறிஸ்துவின் அன்பைக் குறிக்கும் ஆன்மீகச் சின்னமாகும். இதயம் என்பது அன்பின் மையம் என கருதப்படுகிறது. மன்னிப்பு, அன்பு ஆகியவை இதயத்திலிருந்து பிறக்கின்றன என்று நாம் கூறுவோம். அதுபோல் இயேசுவின் திரு இருதயம் மனித குலத்தின் மீதான இறைவனின் எல்லையற்ற அன்பை வெளிப்படுத்துகிறது.

**திரு இருதயப் படங்களில் நாம் காண்பது:**

- ❖ தீயால் எரியும் இதயம் – அன்பின் தீ
- ❖ முட்கிரீடம் சூழ்ந்த இதயம் – மனிதனின் பாவங்களால் ஏற்பட்ட துன்பம்.
- ❖ காயம் பெற்ற இயதம் – மனித குலத்திற்காக அனுபவித்த வேதனை.
- ❖ ஒளி வீசும் இதயம் – மீட்பின் நம்பிக்கை.

இந்த அடையாளங்கள் அனைத்தும் இயேசுவின் அன்பு என்பதை வெளிப்படுத்துகின்றன.

**2. மன்னிப்பின் இதயம்**

இயேசுவின் வாழ்க்கையில் மன்னிப்பு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. அவர் போதித்த முக்கியமான கருத்துவக்களில் ஒன்று மன்னிப்பாகும்.

1. "தந்தையே! இவர்களை மன்னியும்" (லூக்கா 23:34) என்று வேண்டிய இயேசுவின் திரு இருதயம் மன்னிப்பின் உச்சத்தை நமக்குக் காட்டுகிறது.

2. இயேசுவின் இதயம் குற்றத்தை நினைவில் கொள்ளாது. அன்பால் உடைத்து மன்னிப்பை விதைக்கின்றது.

2. "மற்றவர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்" (மத்தேயு 6:14)

❖ மன்னிப்பு என்பது ஒரு தேர்வு மட்டுமல்ல. அது இறைவனுடன் நம் உறவை ஆழமாக்கும் ஒரு பாதை. நாம் பிறரை மன்னிக்கும்போது நம் இதயம் சுமைகளிலிருந்து விடுபட்டு அன்பின் ஒளியில் நடக்கத் தொடங்குகிறது.

3. "ஏழு முறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்" (மத்தேயு 18:22)

❖ மன்னிப்புக்கு எல்லை இல்லை என்பது இயேசு கற்றுக் கொடுக்கிறார். மீண்டும் மீண்டும் மன்னிப்பது கடினமாக இருந்தாலும் அதில் தான் உண்மையான அன்பின் ஆழம் தெரிகிறது. மன்னிப்பு நம் உள்ளத்தைச் சுத்தப்படுத்தி நம்மை வாழச் செய்கிறது.

4. "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு" (மாற்கு 2:10).

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" (மாற்கு 2:9) என முடக்குவாதமுற்றவனுக்கு கூறுகிறார்.

❖ மனிதன் செய்ய முடியாததை இயேசு செய்கிறார். பாவிகளை மன்னித்து புதிய வாழ்க்கையை அளிக்கிறார். அவரின் மன்னிப்பு என்பது பலவீனம் அல்ல, மன்னிப்பு என்பது வலிமை. இயேசுவின் திரு இருதயம் இந்த உண்மையை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது.

மனிதன் தவறு செய்வது மனித இயல்பு, மன்னிப்பது இறை இயல்பு.

- ❖ மன்னிப்பு என்பது பலவீனம் அல்ல; அது அன்பின் மிகப்பெரிய வலிமை.
- ❖ இயேசுவின் மன்னிப்பு எல்லையற்றது – குற்றத்தை அல்ல, மனிதனைப் பார்க்கிறது.
- ❖ மன்னிப்பு காயத்தை நினைவில் வைக்காது; அதை அன்பால் ஆற்றுகிறது.
- ❖ இயேசுவின் மன்னிப்பு பகைமையை உடைத்து அமைதியை உருவாக்குகிறது.
- ❖ மன்னிக்கும் இதயம்தான் உண்மையான தெய்வீக இதயம்.
- ❖ மன்னிப்பு பழிவாங்கலை முடித்து புதிய தொடக்கத்தைத் தருகிறது.
- ❖ இயேசுவின் மன்னிப்பு மனிதனை மாற்றும் சக்தி கொண்டது.
- ❖ மன்னிப்பு என்பது கடந்த காலத்தை விடுவித்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் அருள் வரங்களில் ஒன்று.
- ❖ மன்னிக்கும் போது நாம் இறைவனின் அன்பை வாழ்வில் காட்டுகிறோம்.
- ❖ மன்னிப்பு – புதிய வாழ்வின் தொடக்கம்.

**3. திரு இருதயம்: இரக்கத்தின் அடையாளம்**

இயேசுவின் திரு இருதயம் இரக்கத்தின் ஆழமான அடையாளமாகும். மனிதர்களின் துன்பங்களைப் பார்த்து உணவளிக்கிறார்,



Scanned with OKEN Scanner



நோயாளிகளைப் பார்த்து குணமாக்கினார், பாவிகளைக் கண்டு அவர்களைத் தள்ளிவிடாமல் தன்னருகே அழைக்கிறார்.

1. "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாயிருங்கள்" (லூக் 6:36)

❖ இயேசு நமக்கு எவ்வளவு இரக்கம் காட்டுகிறார் என்பதைப் போலவே நாமும் மற்றவர்களிடம் கருணையுடன் நடக்க வேண்டும் என்று இந்த வசனம் சொல்லுகிறது. இது கிறிஸ்துவ வாழ்க்கையின் அடிப்படைக் குணமாகும்.

2. "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத்தேயு 5:7)

❖ இரக்கம் காட்டுபவர்கள் இறைவனிடமிருந்து ஆசீர்வாதத்தையும், இரக்கத்தையும் பெறுவார்கள். இது "நாம் செய்வது நமக்கே திரும்பி வரும்" என்ற ஆன்மீக உண்மையைக் காட்டுகிறது.

3. "இயேசு பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவு கொண்டார். அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார் (மத்தேயு 14:14)

4. "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத்தேயு 9:13)

❖ இயேசு வரிதண்டுபவர்கள், பாவிகளோடு அமர்ந்து விருந்துண்பது ஏன்? என்று இயேசுவின் சீடர்களிடம் கேட்டதைக் கேட்ட இயேசு, "நோயற்றவர்க்கு அல்ல; நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" என்று கூறி "பலியை அல்ல; இரக்கத்தையே விரும்புகிறேன்" என்றார்.

5. "ஆண்டவரே! எங்கள் கண்களைத் திறந்தருளும்" இரண்டு குருடர்கள் வேண்ட இயேசு பரிவு கொண்டு அவர்களின் விழிகளைத் தொட்டார். பார்வை பெற்றனர். (மத்தேயு 20:34)

இயேசு பல இடங்களில் தனது இரக்கத்தை வெளிப்படுத்துகிறார். அப்பம் பலுகியது, குருடர் பார்வை பெற்றது, செவிடர், ஊமையர் குணம் பெற்றது, இறந்தோரை உயிர்ப்பித்தது, பாவிகளை அரவணைத்தது. இறை இயேசுவின் அளவு கடந்த இரக்கம் வெளிப்பட்டது.

4. இரக்கம் இறைவனின் முகம்

❖ இரக்கம் என்பது அன்பின் உயிர்

❖ இரக்கம் கொண்ட இதயம் இறைவனுக்கு நிகரானது.

❖ பிறரின் துன்பத்தை உணர்வதே உண்மையான இரக்கம்.

❖ மன்னிப்பில் வெளிப்படும் அன்பே இரக்கம்.

❖ இரக்கம் மனிதனை மனிதனாக மாற்றுகிறது.

❖ உதவிக்கரம் நீட்டுவது இரக்கத்தின் செயல்

❖ இரக்கம் உள்ள இடத்தில் அமைதி உண்டு.

❖ கடினமான இதயத்தை மென்மையாக்குவது இரக்கம்.

❖ இரக்கம் காட்டுபவன் ஆசீர்வாதம் பெறுகிறான்.

❖ சிறிய உதவியும் பெரிய இரக்கமாக மாறும்.

❖ இரக்கம் உலகை மாற்றும் அன்பு.

❖ இரக்கம் – மனிதனின் உயர்ந்த பண்பு

இன்றைய உலகில் மனிதர்கள் தனிமை, துன்பம், வறுமை, மன வேதனை ஆகியவற்றில் வாழ்கின்றனர். இப்படிப்பட்ட சூழலில் இயேசுவின் திரு இருதயம் நமக்கு நம்பிக்கைத் தருகிறது. இயேசு எப்போதும் நம்மை இரக்கத்துடன் அணுகுகிறார்.

**நம் வாழ்வில் திரு இருதயத்தின் முக்கியத்துவம் :**

இயேசுவின் திரு இருதயத்தைத் தியானிப்பது



Scanned with OKEN Scanner

நம் வாழ்க்கையை மாற்றுகிறது.

- ❖ நாம் மன்னிக்கக் கற்றுக்கொள்கிறோம்.
- ❖ இரக்கம் காட்ட கற்றுக்கொள்கிறோம்.
- ❖ அன்பு செலுத்த கற்றுக்கொள்கிறோம்.
- ❖ தாழ்மையுடன் வாழக் கற்றுக்கொள்கிறோம்.
- ❖ பிறருக்கு உதவ முன் வருகிறோம்.

**திரு இருதயத்தின் இரக்கம் ஒரு வாழ்க்கை மாற்றம்.**

**(உண்மைச் சம்பவம்)**

அந்தோணி ஒரு குடிகாரர் கோபக்காரர். குடித்துவிட்டு குடும்பத்துடன் எப்போதும் சண்டையிடுபவராக இருந்தார். வாழ்க்கையில் அமைதியும், மகிழ்ச்சியும் இல்லாமல் தவித்தார். ஒரு நாள் அவர் ஆலயத்திற்கு சென்று இயேசுவின் திரு இருதய சுருபத்தைப் பார்த்தார் மனக்கவலையை சொல்லி அழுது இயேசுவின் இதயத்தை உற்றுநோக்கினார். உடனே அந்த இருதயத்தில் காட்டப்பட்ட அன்பும் இரக்கமும் உள்ளுக்குள் மாற்றம் பெற்று அமைதி அடைந்தார். அதன் பிறகு அவர் தினமும் இயேசுவின் திருஇருதய சுருபத்தின் முன் செபிக்கத் தொடங்கினார். "இயேசுவே, உம்மைப் போல எனக்கும் இரக்கமுள்ள இதயம் தாரும்" என்று செபித்து வந்தார். சில நாட்களில் பெரிய மாற்றம். அவரது மனம் மாறத் தொடங்கியது.

கோபம் குறைந்தது. மன அமைதி கிடைத்தது. குடும்பத்துடன் அன்பாக பேசத் தொடங்கினார். குடியை விட்டார். சண்டை போடுவதை விட்டு அன்பும், பொறுப்பும் மிக்க தலைவராய் மிளிர்ந்தார்.

ஒருநாள் அவருடைய குடும்பத்தினர் சொன்னார்கள். நீங்கள் இப்போது மிகவும் மாறிவிட்டீர்கள் என்றனர் அவர் "இயேசுவின் திருஇருதய பக்தி என்னை மாற்றி உண்மையான அமைதியைக் கொடுத்தது" என்றார்.

நாமும் இயேசுவின் திரு இருதய பக்தி கொள்ளும்போது, நம்முடைய வாழ்க்கையிலும் அன்பும், இரக்கமும் மிகப் பெரிய ஆற்றலாக மாற்றத்தை உருவாக்கும்.

திரு இருதயத்தின் பக்தி நமக்கு அமைதியை அளிக்கிறது. மன வேதனையில் இருக்கும் போது இயேசுவின் திரு இருதயத்தை நினைத்தால் ஆறுதல் கிடைக்கிறது.

இன்றைய உலகில் போர், நாட்டுக்கு நாடு சண்டைகள், ஊர்களிலும் ஏன் வீடுகளிலும் வெறுப்பு, பொறாமை அதிகமாக உள்ளது. இப்படிப்பட்ட சூழலில் இயேசுவின் திரு இருதயம் அமைதியின் செய்தியை வழங்குகிறது.

**முடிவுரை**

இயேசுவின் திரு இருதயம் மன்னிப்பும், இரக்கமும், அன்பும் நிறைந்த தெய்வீக அடையாளமாகும். மனித குலத்தின் மீதான இறைவனின் அளவற்ற இரக்கத்தையும், அன்பையும் வெளிப்படுத்துகிறது.

நாம் இயேசுவின் திருஇருதயத்தைத் தியானிக்கும் போது, நமது இதயங்களும் மாறவேண்டும். வெறுப்பை விட அன்பை தேர்ந்தெடுக்க வேண்டும். கோபத்தை விட்டு மன்னிப்பு அளிக்க மனம் மாறவேண்டும். வெறுப்பை விட்டு இரக்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இரக்கம் கொண்ட ஒருவரின் நம்பிக்கையால் உலகையே மாற்ற முடியும்.

இயேசுவின் திரு இருதயத்தை நம்பினால், நம் இதயம் அன்பால் மன்னிப்பால், இரக்கத்தால் நிறையும். இயேசுவின் திரு இருதயம் நமக்கு சொல்லும் செய்தி மிகவும் எளிமையானது. அன்பு செய்! மன்னித்து ஏற்றுக்கொள்! இரக்கம் காட்டு! இவ்வாறு வாழும்போது நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் மாறும் உலகமும் அமைதியால் நிரம்பும். இரக்கம் இல்லாத வாழ்க்கை வெறுமை, இரக்கம் உள்ள வாழ்க்கை தான் அருமை.

**உண்மை வாழ்வு**

இயேசுவின் திரு இருதயத்தின் அன்பும் இரக்கமும் உள்ளத்தை நிரப்பட்டும் அதுவே நம் அனைவரின் வாழ்க்கை ஒளியாக மிளிரட்டும்!!! ●

# கல்வியும் உடல் நலமும்





அருள்சகோதரி. **லடிஸ்கா,**
நலவாழ்வு இல்லம், முத்துப்பட்டி, 7598231472


ஜுன் மாதம் பெரும்பாலும் பள்ளிகள் திறக்கும் காலம். மாணவர்கள் புத்தகப் பையை சுமந்து உற்சாகத்துடன் பள்ளிக்குச் செல்லும் இனிய நாட்கள் இவை. கல்வி என்பது மனிதனின் அறிவை வளர்க்கும் சக்திவாய்ந்த ஆயுதம். குழந்தைகளுக்கு கல்வி அவசியமான ஒன்று என்றாலும், உடல் மற்றும் மனநலம் அதைவிட முக்கியமானது என்பதை எடுத்துச் சொல்லவே இந்தக் கட்டுரை.

கல்வியும் உடல் நலமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஆரோக்கியமான உடலில் தான் தெளிவான மனம் இருக்கும். நல்ல கல்வி அறிவு ஒருவரின் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகிறது. அதே சமயம் சிறந்த உடல்நலம் ஒருவரின் கல்வி ஆற்றலை மேம்படுத்தி, வாழ்வின் வெற்றியை உறுதி செய்கிறது. மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு, கல்வியும் உடல் நலமும் என்ற இரு தூண்கள் அவசியம்.

**உடல்நலத்தின் முக்கியத்துவம்:**

❖ ஆரோக்கியமான உடலும் சுறுசுறுப்பான மனமும் வகுப்பறையில் முழு கவனத்துடன் கற்க உதவுகிறது.

❖ உடல்நலம் சிறப்பாக இருந்தால் நீண்ட நேரம் படிப்பதற்கான ஆற்றலும் ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.

❖ சரியான உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகள் கல்வி தொடர்பான மன அழுத்தத்தை குறைக்க உதவுகின்றன.

❖ நல்ல உறக்கமும் சத்தான உணவும் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் கல்வி திறனுக்கும் அடிப்படையாக அமைகின்றன.

**கல்வியின் பங்கு:**

❖ கல்வி ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

❖ தனிநபர் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளின் அவசியத்தை உணர்த்துகிறது.

❖ மன ஆரோக்கியத்தை பாதுகாப்பது எப்படி என்பதையும் கற்றுத் தருகிறது.

❖ ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் சமூக நற்பண்புகளை வளர்க்கிறது.

**ஒரு நிகழ்வு**

ஒரு நாள் என் உறவினரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். அனைவரும் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்தனர். உணவு நேரம் வந்ததும், அப்பா தொலைக்காட்சி முன் அமர்ந்து சாப்பிட்டார். அம்மா Bluetooth சாதனத்தில் பேசிக்கொண்டே சமையல் செய்தார். பிள்ளைகள் இருவரும் தங்களது கைபேசியில் வீடியோக்கள் பார்த்துக்கொண்டே உணவருந்தினர். அம்மா சூடாக தோசை செய்து ஒவ்வொருவருக்கும் அவர்கள் இருந்த இடத்திற்கே கொண்டு வந்து பரிமாறினார். இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவர்கள் இருவரும்

ஆசிரியர்கள்!

கல்வி கற்றுத் தருவது மட்டும் போதுமா? அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதே உண்மையான சிறப்பு அல்லவா? கற்ற கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பு இல்லையெனில் அந்த கல்வியால் என்ன பயன்? பெற்றோரின் முன்மாதிரியான வாழ்க்கையே குழந்தைகளுக்கு மிகப் பெரிய பாடமாக அமைகிறது.

**பெற்றோர்களே! சில ஆலோசனைகள்:**

❖ குடும்பமாக சேர்ந்து அமர்ந்து உணவருந்தும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

❖ குழந்தைகளை மற்ற குழந்தைகளோடு விளையாட அனுமதியுங்கள்.

❖ அவர்கள் படிக்கும் நேரத்தில் சிறிது நேரமாவது ( புரிகிறதோ, புரியவில்லையோ) அருகில் அமருங்கள்.

❖ சத்தான உணவுகளையும் வீட்டிலேயே தயாரித்த தின்பண்டங்களையும் கொடுங்கள்.

❖ சுய ஒழுக்கத்தை கற்றுத்தாருங்கள். தங்கள் வேலைகளை( சாப்பிட்ட தட்டை கழுவுதல், குறைந்த பட்சம் உள்ளாடைகளைத் துவைத்தல், சிறு சிறு வேலைகள்)தாங்களே செய்ய பழக்குங்கள்.

❖ தினமும் சிறிது நேரம் உடற்பயிற்சி மற்றும் மூச்சுப்பயிற்சி செய்ய ஊக்குவியுங்கள்.

❖ சரியான நேரத்தில் உறங்கி அதிகாலையில் எழும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

❖ பயப்படும் விஷயங்களை மெதுவாக எதிர்கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.

❖ பிற குழந்தைகளோடு ஒப்பிட்டு பேசாதீர்கள்.

❖ அலைபேசி மற்றும் தொழில்நுட்ப சாதனங்களை அளவோடு பயன்படுத்த கற்றுக்கொடுங்கள்.

❖ குழந்தைகளிடம் எப்போதும் நேர்மறையான வார்த்தைகளையே பேசுங்கள்.

**நிறைவாக,**

உடல் மற்றும் மனநலம் இல்லாமல் கல்வியில் முழுமையான முன்னேற்றம் பெற முடியாது. ஆரோக்கியமான உடலும் தெளிவான மனமும் இருந்தால்தான் மாணவர்கள் சிறப்பாக கற்க முடியும். ஆகவே, கல்வியையும் உடல்நலத்தையும் சமமாக பேணுவது ஒவ்வொரு பெற்றோரின் மற்றும் ஆசிரியரின் கடமையாகும்.

“நல்ல உடல்நலம் நல்ல கல்விக்கான அடித்தளம்; நல்ல கல்வி நல்ல வாழ்க்கைக்கான வழித்தடம்.”




✝
நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். (மத் 25:35)

**ஆனந்தா**

**நண்பகல் உணவுத்திட்டம்**

சிவகங்கை மறைமாவட்டம்



**நீங்களும் எம் கனவுத் திட்டத்தில் பங்கேற்கலாமே!**



**பகிர்வோம்**
**பசிபோக்குவோம்**

ஆனந்தா மதிய உணவுத் திட்ட வங்கிக் கணக்கு விபரம்

| | | |
|---|---|---|
| A/C No. | : | 99 90 25 12 15 08 59 |
| A/C Name | : | ANANDA CHARITABLE TRUST |
| IFSC Code | : | HDFC0002576 |
| Branch | : | SIVAGANGAI |
| Bank | : | HDFC |




# கல்வியே செல்வம்

ச. ஜெயராஜ்
உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் ஓய்வு, சாலைக்கிராமம்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு"
- திருக்குறள்,
"கற்க சகடற" - திருக்குறள்,
"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" - திருக்குறள்
"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"
- ஒளவையார்,
"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்"
- மூதுரை
"அன்னயாவினும் புன்னியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
- பாரதியார்,
"கண்ணுடையோர் என்போர் கற்றோர்"
- திருக்குறள்
"கற்றது ஒழுகு" - பாரதியார் ஆத்திசூடி
"கல்விக் கழகு கசடற மொழிதல்"
- வெற்றிவேற்கை
"கல்வி சிறந்த தமிழ்நாடு உயர்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" - பாரதியார்
"எளிமையினால் ஒரு தமிழன்
படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும்
நானிடவும் வேண்டும்" - பாரதிதாசன்
"கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை"
- கொன்றை வேந்தன்
"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" - வெற்றிவேற்கை
"படிக்கையிலே தொல்லை இருக்கும்; படித்து
முடிக்கையிலே முற்றும் மகிழ்ச்சி, முடித்தபின்
தொட்டதெல்லாம் வெற்றி, துயரின்றி வாழலாம்
கட்டாயம் கல்வி பயில்" - பாரதிதாசன்
"எல்லா நலமும் ஈந்திடும், கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க" - பாரதிதாசன்
"கல்வி கரையில கற்பவை நாள்சில" - நாலடியார்
"கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு" - நான்மணிக்கடிகை
"எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு"
- ஏலாதி
"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"
- புறநானூறு
"கைப்பொருள் கொடுத்தும் கற்க"
-சீவகசிந்தமாணி
"வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது"
- விவேக சிந்தாமணி
"அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்"
- நீதிநெறிவிளக்கம்
"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோரணிகலம் வேண்டாவா"
- நீதிநெறி விளக்கம்
"கல்லாத மக்கள் பொல்லாத விலங்குகள்"
- செகவீரபாண்டியானர்
"விதைக்காதபோது விளைச்சலும்
சமைக்காத போது உணவும்
உழைக்காத போது பலனும்
இல்லாதது போல் கல்லாதபோது
சிறப்பும் இல்லை"



Scanned with OKEN Scanner

2026-27ஆம் கல்வியாண்டில் காலடி எடுத்துவைக்கும் மாணவச் செல்வங்களே, என் அறிவுக்கு எட்டியமட்டும் கல்வியின் சிறப்பை, கல்வியே செல்வம் என்பதை பல்வேறு இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறேன்.

கல்வியின், அகல ஆழ உயரத்தை இன்னும் பல்லாயிரக் கணக்கான இலக்கியங்கள் எடுத்தியம்பியுள்ளன. இத்தகைய கரையிலாக் கல்வியைக் கற்றுக் கொள்ள, வாழ்க்கையில் வரலாறு படைக்க வந்துள்ள உங்கள் அனைவரையும் கல்வியாண்டில் வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன்.

கல்வி என்பது கிட்டாத கனவாக, எட்டாத கனியாக இருந்த காலம்போய் ஊர்தோறும் பள்ளி, வீதிகள்தோறும் பள்ளி என்ற நிலை வந்தாகிவிட்டது.

பணம் படைத்தவர்களுக்கே கல்வி என்ற நிலைமாறி சாமானியனுக்கான கல்வி கனிந்து வந்துள்ளது. "ஏழைகளுக்கு உதவாத கல்வி கல்வியே அன்று. கல்வி குடிபுக வேண்டிய முதலிடம் ஏழைகளின் குடிசையில்தான்" என்று காந்தியடிகள் ஏழைகளுக்கான கல்வியை உள்ளக் கனவு கண்டார்; கதவு திறந்தது, அனைவருக்குமான கல்வித் திட்டம் பிறந்தது.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த காலம்மாறி, பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும், நாட்டை ஆளவும், வீட்டை வழிநடத்தவும் பாரினில் பெண்கள் படைக்க வந்துவிட்டார்கள். பெண்களின் கல்வியால் விண்ணில் பறக்கவும் முடியும் மண்ணில் நிற்கவும் முடியும் என்று பெண்கள் தங்கள் கல்வியால் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். எனவே மாணவர்களே வந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

**Education** என்ற சொல் **"Educare"** என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து மருவி வந்துள்ளது. **Educare** என்ற சொல்லிற்கு தோண்டுதல், வெளிக்கொணர்தல் என்று பொருள்படும். அதாவது ஏற்கனவே உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் கொட்டிக்கிடக்கின்ற அறிவுப் புதையலை, அறிவுச் சுரங்கத்தைத் தோண்டி வெளிக்கொணர்வதே கல்வி கற்பதன் உண்மையான நோக்கமாகும். எனவே "எனக்கு கணிதம் வராது ஆங்கிலம் வராது, வரலாறு நுழையாது" என்ற பிற்போக்கான எண்ணத்தைக் கைவிட்டு எல்லாம் என்னால் முடியும் என்ற வீரத்தோடும், விவேகத்தோடும், தீரத்தோடும் துணிவோடும் வகுப்பறைக்குள் நுழையுங்கள். நீங்கள் எடுத்துவைக்கின்ற ஒவ்வொரு அடியும் உங்கள் வாழ்க்கையின் படிக்கல்லாய் அமையட்டும்.

பாராங்கல் ஒன்று இருந்த இடத்திலேயே இருந்தால் பலபேர் மிதித்துச் செல்லுகின்ற கல்லாகவே இருக்கும். ஆனால் எந்தக் கல் உளியால் அடிக்கப்பட்டு, செதுக்கப்பட்டு வடிவமைக்கப்படுகிறதோ அந்தக் கல்லே சிலையாக மாறி கருவறைக்குள் நுழைந்து தெய்வமாக வணங்கப்படுகிறது. அதைப்போல் நீங்களும் உங்கள் நற்சிந்தனையால், சொல்லால், செயலால், ஒழுக்கத்தால், கீழ்ப்படிதலால், கடமையுணர்வால் செதுக்கப்படும்பொழுது உண்மையான, நன்மையான, தெய்வீகமான கல்வியைப் பெறுவீர்கள். உண்மையான கல்வி உங்களை உயரத்திற்கு அழைத்துச் செல்லும், உயரத்திற்குச் செல்லும்பொழுது வாழ்க்கை உயரும். உங்கள் வாழ்க்கை உயரும்பொழுது நீங்கள் முழு மனிதனாக மாறுவீர்கள். நீங்கள் முழு மனிதனாக மாறும்பொழுது உங்கள் உடல், உள்ளம், ஆன்மா மூன்றும் ஒன்றுபட்ட வளர்ச்சி பெறும். எனவே ஒப்பற்ற கல்வியைக் கசடறக் கற்று, கற்றபடி நடந்தால் வெற்றிக்கனி உள்ளங்கையில்.

மண்ணில் புதையுண்ட உயிருள்ளவையும் உயிரற்றவை யாவும் மண்ணோடு மண்ணாக மக்கி மடிந்து போகும். ஆனால் மண்ணில் புதையுண்ட விதைகள் மட்டுமே வீறுகொண்டு எழுந்து தன்னை வளர்த்த மண்ணுக்கு உயிர் தரும், உயிர்ப்பு தரும், மழை தரும், மழை தரும், பசுமை தரும், குளிர்ச்சி தரும், இலை தரும், விளைச்சலைத் தரும், காடு தரும், வீடு தரும், நாடு தரும், நகரம் தரும், காற்று தரும், ஆற்று தண்ணீர் தரும், கீற்று ஓலை தரும்.

மாணவர்களே நீங்கள் கல்விச் செல்வத்தைப் பெற்று எப்பொழுது விதையாக மாறப் போகிறீர்கள்..?

ஆனந்த கங்கைதூது

கவிதைப்பகுதி

# வெற்றியின் வெளிச்சம்




நன்பனே
நட ...

வெற்றியின் வெளிச்சம்
விழிகளுக்குக் கிட்டும் வரை
தோழனே
தொடர்ந்து நட ...

தோல்வியின் சுவர்கள்
தடுத்துப் பார்க்கட்டுமே ...
இதயத்தினுள்ளே
தைரியமிருந்தால்
இமயத்தைக் கூட
தாண்டிவிட முடியாதா?

பாலை வெளியிலும்
பாறை வழியிலும்
பாதத்தை இயக்கி
பயணத்தை நடத்து ...

பள்ளத்தைக் கண்டு
பயணத்தை நிறுத்திவிடாதே
வெள்ளத்தைப் பார்
வழியை மாற்றுகிறதா?

முள்ளின் முனையை
முத்தமிடும் கரங்களுக்கே
அழகிய ரோஜா
அதன் விரர்களுக்குக்
கிடைக்கும்!

கடல் நீரில் கூட
கப்பலில் பயணிக்கலாம்
கண்ணீரில் வாழ்வு
கவிழ்வது நிச்சயம்!

புயல் காற்று வீசி
பூச்செடிகள் ஒடியலாம்
ஆணிவேர் எல்லாம்
அப்படியே தானே இருக்கிறது
மீண்டும் முளைப்பதற்கு!

சோதனைகளை தோளில்
சுமக்கக் கற்றுக்கொள்
சாதனைகள் வாழ்வில்
சுலபமாய்
கிடைத்துவிடும்.

நண்பனே
நட
வெற்றியின் வெளிச்சம்
விழிகளுக்கு
கிட்டும் வரை...

– நல்லாசியர் கவிஞர் **எல்.பிரைட்**



Scanned with OKEN Scanner




# விவிலியப் பார்வையில் ஒழுக்கமும் கல்வியும்

மாரா

**அறிமுகம்**

"கல்வியே செல்வம்" என்பது நம் முன்னோர் மொழி. மனித வாழ்க்கையை உயர்த்தி, அறிவு, திறமை, சமூக மரியாதை ஆகியவற்றை வழங்கும் வல்லமை கல்விக்கு உண்டு. ஆனால் கல்வி என்பது வெறும் புத்தக அறிவைப் பெறுவதற்காக மட்டுமல்ல. உண்மையான கல்வி மனிதனின் உள்ளத்தையும், சிந்தனையையும், நடத்தையையும் மாற்ற வேண்டும். அந்த மாற்றத்தின் அடிப்படை அம்சமாக இருப்பது ஒழுக்கம் ஆகும்.

இன்றைய உலகம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் பல புதிய அறிவுகளைப் பெறுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் மனிதநேயம், நேர்மை, கட்டுப்பாடு, மரியாதை, பொறுப்பு உணர்வு போன்ற ஒழுக்க மதிப்புகள் குறைந்து வருகின்றன. அறிவு அதிகரித்தாலும் மனித மனம் அமைதியிழந்து வருகிறது. இதனால் குடும்பங்களிலும் சமூகத்திலும் பல பிரச்சினைகள் உருவாகின்றன.

இந்த நிலையில், கல்வியுடன் ஒழுக்கமும் இணைந்து வளர வேண்டும் என்பது மிக அவசியமானதாகிறது. குறிப்பாக விவிலியம் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் ஆழமான முக்கியத்துவத்தை அளிக்கிறது. இறையச்சம், அன்பு, நீதியை அடிப்படையாக கொண்ட வாழ்க்கை, சுய கட்டுப்பாடு, பணிவு, பிறர்நலம் போன்ற உயர்ந்த பண்புகளை மனித வாழ்க்கையின் அடித்தளமாக விவிலியம் கற்பிக்கிறது.

எனவே, "விவிலியப் பார்வையில் ஒழுக்கமும் கல்வியும்" என்ற தலைப்பின் மூலம் கல்வியின் உண்மையான நோக்கத்தையும், ஒழுக்கத்தின் அவசியத்தையும், விவிலியத்தின் வெளிச்சத்தில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**1. ஒழுக்கம் என்றால் என்ன?**

ஒழுக்கம் என்பது மனிதன் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து வாழும் வாழ்க்கை முறை ஆகும். மனிதனின் சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவற்றில் நேர்மை மற்றும் கட்டுப்பாடு காணப்படுவது ஒழுக்கமாகும். உண்மை பேசுதல், அன்பு காட்டுதல், பிறரை மதித்தல், பொறுப்புடன் நடந்து கொள்வது, தவறுகளைத் தவிர்ப்பது போன்ற பண்புகள் ஒழுக்கத்தின் வெளிப்பாடுகளாகும்.

விவிலியம் ஒழுக்கத்தை மனித வாழ்க்கையின் முக்கியமான அடிப்படையாகக் காட்டுகிறது.

"இறையச்சமே ஞானத்தின் தொடக்கம்" – நீதிமொழிகள் 1:7. இந்த இறைவார்த்தை உண்மையான ஞானம் இறைச்சத்தில் தொடங்குகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. கடவுளை மதித்து வாழும் மனிதன் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்துவான். திருவள்ளுவரும் ஒழுக்கத்தின் உயர்வை எடுத்துரைக்கிறார்:

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்."**

இதன் மூலம் மனிதனின் உண்மையான மதிப்பு அவனுடைய ஒழுக்கத்தில் இருப்பதை அறியலாம்.



Scanned with OKEN Scanner

**2. கல்வியின் உண்மையான நோக்கம்**

இன்றைய சமுதாயத்தில் கல்வி பெரும்பாலும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் கல்வியின் உண்மையான நோக்கம் நல்ல மனிதனை உருவாக்குவதாகும்.

ஒரு மாணவன் அதிக மதிப்பெண்களைப் பெறலாம்; பல பட்டங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் அவனிடம் மனிதநேயம், பொறுப்பு உணர்வு, நேர்மை, பணிவு போன்ற பண்புகள் இல்லாவிட்டால், அந்த கல்வி முழுமையானதாக இருக்காது.

விவிலியம் கல்வியை வாழ்க்கை வழிகாட்டுதலாகக் காட்டுகிறது.

"பிள்ளையை அவன் போகவேண்டிய வழியிலே நடத்து; அவன் முதிர்ந்தாலும் அதை விடமாட்டான்." - நீதிமொழிகள் 22:6

இந்த இறைவார்த்தை கல்வி என்பது வெறும் அறிவைப் போதிப்பது அல்ல; நல்ல வாழ்க்கை பாதையில் நடத்தும் பணியாகும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவின் போதனைகளும் இதையே வலியுறுத்துகின்றன. அவர் மனிதனை அன்பு, பணிவு, மன்னிப்பு, இரக்கம், சேவை ஆகியவற்றின் வழியில் நடத்தினார். எனவே உண்மையான கல்வி மனிதனை உள்ளிருந்து மாற்ற வேண்டும்.

**3. மாணவர்களின் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் அவசியம்**

மாணவர் வாழ்க்கை மனிதனின் எதிர்காலத்தை அமைக்கும் முக்கியமான காலமாகும். இந்த பருவத்தில் உருவாகும் பழக்கங்கள் வாழ்நாள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**3.1 நேர மேலாண்மை**

ஒழுக்கமான மாணவர்கள் தங்களின் நேரத்தை சரியாக பயன்படுத்துவார்கள். அவர்கள் படிப்பு, ஓய்வு, விளையாட்டு, ஆன்மீக வாழ்க்கை ஆகியவற்றில் சமநிலையை பேணுவார்கள். "காலத்தைப் பயனுள்ளதாக பயன்படுத்துங்கள்." எபேசியர் 5:16. இந்த இறைவார்த்தை நேரத்தின் மதிப்பை உணர்த்துகிறது.

**3.2 பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மரியாதை**

விவிலியம் பெற்றோரை மதிப்பது மிக முக்கியமான கடமையாகக் கூறுகிறது. "உன் தாயையும் தந்தையையும் மதித்து நட." விடுதலைப்பயணம் 20:12. பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மதிக்கும் மாணவர்கள் வாழ்க்கையில் நல்ல வழிநடத்தலைப் பெறுவார்கள்.

**3.3 நல்ல நட்பு**

நண்பர்கள் மனித வாழ்க்கையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். எனவே மாணவர்கள் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல சூழலில் வளர வேண்டும்.

**3.4 சுய கட்டுப்பாடு**

மாணவர்களின் வாழ்க்கையில் சுய கட்டுப்பாடு மிகவும் அவசியம். அலைபேசி, சமூக வலைதளங்கள், சோம்பேறித்தனம் போன்றவை அவர்களின் முன்னேற்றத்தை பாதிக்கக்கூடும். ஒழுக்கம் இந்த சவால்களை சமாளிக்க உதவுகிறது.

**4. விவிலியம் காட்டும் ஒழுக்க மதிப்புகள்**

விவிலியம் மனித வாழ்க்கைக்கு தேவையான பல உயர்ந்த பண்புகளை கற்பிக்கிறது.

**4.1 அன்பு**

இயேசு கிறிஸ்து அன்பை மிக உயர்ந்த கட்டளையாகக் கூறினார். "நீ உன்னை நேசிப்பதுபோல் பிறரையும் நேசி." - மத்தேயு 22:39. அன்பு மனித உறவுகளை வலுப்படுத்துகிறது.

**4.2 நேர்மை**

நேர்மையான வாழ்க்கை கடவுள் மிகவும் விரும்புவது. கல்வி பெற்ற மாணவர்கள் நேர்மையாக வாழ கற்றுக்கொள்ள வேண்டும். நேர்மை மதிப்பையும் மாண்பையும் உயர்த்தி உண்மைத்தன்மையின் அச்சாணியாக அமையும்.

**4.3 தாழ்ச்சி**

இயேசு தம்முடைய சீடர்களின் கால்களை கழுவி தாழ்ச்சியின் உயர்வை எடுத்துக்காட்டினார். உண்மையான கல்வி பணிவையும் தாழ்ச்சியையும் வளர்க்க வேண்டும்.

**4.4 மன்னிப்பு**

மன்னிக்கும் மனப்பான்மை மனித உறவுகளை பாதுகாக்கிறது. கோபம் மற்றும் பழிவாங்கும் எண்ணம் மனிதனை அழிக்கிறது.



Scanned with OKEN Scanner

**5. இன்றைய கல்வி முறையின் சவால்கள்**

**5.1 மதிப்பெண் மைய கல்வி**

இன்றைய கல்வி முறை மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியை விட மதிப்பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இதனால் மாணவர்கள் மன அழுத்தத்திற்கும் போட்டி மனப்பான்மைக்கும் ஆளாகின்றனர்.

**5.2 தொழில்நுட்பத்தின் தாக்கம்**

இணையம் மற்றும் சமூக வலைத்தளங்கள் பல நல்ல கருத்துக்களை அளித்தாலும், அவை மாணவர்களின் கவனத்தை சிதறடிக்கின்றன. சில நேரங்களில் தவறான பழக்கங்களுக்கும் வழிவகுக்கின்றன.

**5.3 குடும்ப உறவுகளில் குறைவு**

பெற்றோர்கள் வேலைப்பளுவினால் குழந்தைகளுடன் போதுமான நேரம் செலவிட முடியாமல் இருக்கின்றனர். இதனால் குழந்தைகள் சரியான வழிகாட்டுதலை இழக்கிறார்கள்.

**5.4 ஆன்மீக விழிப்புணர்வு குறைவு**

இறையச்சம் மற்றும் ஆன்மீக மதிப்புகள் குறைந்து வருவதால் மாணவர்கள் உள்ளார்ந்த அமைதியை இழக்கின்றனர்.

**6. ஒழுக்கத்தை வளர்க்கும் வழிகள்**

**6.1 குடும்பத்தின் பங்கு**

குழந்தையின் முதல் பள்ளி குடும்பமாகும். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். "இந்த வார்த்தைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதிக்க வேண்டும்." - இணைச்சட்டம் 6:7

**6.2 ஆசிரியர்களின் பங்கு**

ஆசிரியர்கள் மாணவர்களின் குணநலன்களை உருவாக்கும் முக்கியமானவர்கள். ஆசிரியர்களின் வார்த்தைகளும் நடத்தைகளும் மாணவர்களை ஆழமாக பாதிக்கின்றன.

**6.3 திருச்சபையின் பங்கு**

திருச்சபை மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் ஒழுக்க உருவாக்கத்திற்கும் உதவுகிறது. விவிலிய வார்த்தைகள் நல்ல வாழ்க்கை மதிப்புகளை கற்பிக்கின்றன.

**6.4 ஜெபமும் விவிலிய வாசிப்பும்**

தினசரி ஜெபமும் விவிலிய வாசிப்பும் மாணவர்களின் மனதை அமைதிப்படுத்தி நல்ல சிந்தனையை வளர்க்கின்றன.

**7. இயேசு கிறிஸ்து - உயர்ந்த ஆசிரியர்**

இயேசு கிறிஸ்து உலகின் உயர்ந்த ஆசிரியராகக் கருதப்படுகிறார். அவர் சொற்களால் மட்டும் அல்ல, தமது வாழ்க்கையின் மூலமும் போதித்தார். அவர் ஏழைகளை நேசித்தார், நோயாளிகளை குணப்படுத்தினார், பாவிகளை மன்னித்தார். இதன் மூலம் உண்மையான கல்வி அன்பும் சேவையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார். "அமைதியை நிலைநாட்டுவோர் பேறுபெற்றோர்." மத்தேயு 5:9. இயேசுவின் வாழ்க்கை மாணவர்களுக்கு ஒழுக்கமான வாழ்க்கையின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**8. ஒழுக்கமும் கல்வியும் இணைந்த சமூகம்**

ஒழுக்கமும் கல்வியும் இணைந்தால் நல்ல குடும்பமும் நல்ல சமுதாயமும் உருவாகும். அறிவு மட்டும் போதாது; நல்ல மனமும் தேவையானது. மருத்துவர், ஆசிரியர், பொறியாளர், அதிகாரி போன்ற உயர்ந்த நிலைகளை அடையும் மாணவர்கள் ஒழுக்கமற்றவர்களாக இருந்தால், சமூகம் பாதிக்கப்படும். ஆனால் ஒழுக்கத்துடன் கூடிய கல்வி அமைதியையும் நீதியையும் உருவாக்கும். இன்றைய உலகிற்கு தேவை அறிவாளிகள் மட்டுமல்ல; நல்ல மனிதர்களும் ஆவர்.

**முடிவுரை**

விவிலியப் பார்வையில் கல்வியும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவை. கல்வி அறிவை அளிக்கிறது; ஒழுக்கம் அந்த அறிவை சரியான வழியில் பயன்படுத்த கற்றுக்கொடுக்கிறது.

இறையச்சம், அன்பு, நேர்மை, பணிவு, மன்னிப்பு, சுய கட்டுப்பாடு போன்ற விவிலிய மதிப்புகள் மாணவர்களின் வாழ்க்கையை உயர்த்துகின்றன. குடும்பம், பள்ளி, திருச்சபை, சமூகம் ஆகிய அனைத்தும் இணைந்து ஒழுக்கமுள்ள தலைமுறையை உருவாக்க வேண்டும்.

"கல்வியே செல்வம்" என்றால், அந்த செல்வத்தை பாதுகாக்கும் காவலன் ஒழுக்கமே ஆகும். ஒழுக்கத்துடன் கூடிய கல்வி மனிதனை மட்டுமல்ல, சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்தும். அத்தகைய கல்வியை வளர்ப்பதே நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.



Scanned with OKEN Scanner




# கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும்

**நீதி, அன்பு, சமத்துவம் மனித குலத்திற்கான நிலையான வழிகாட்டி**

திரு. **S. அருள் ஜெயராஜ்** MSW.,LLB
வழக்கறிஞர், சிவகங்கை

**இ**ந்தியாவின் சுதந்திரத்திற்கு முன் அதாவது 1773–ல் இருந்து 1947 வரையிலான காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவ ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டவை. அதுமட்டுமின்றி பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் இயற்றிய சட்டங்கள், “கிறிஸ்தவ சட்டங்கள் அல்ல”. மாறாக அவை காலனித்துவ சட்டங்களாகும். இச்சட்டங்கள் அக்கால பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகம், ஆட்சி மற்றும் கட்டுப்பாட்டிற்காக உருவாக்கப்பட்டவை என்பதுதான் வரலாறு. மேலும் அந்த பிரிட்டிஷ் பொதுச் சட்ட முறை தான் (Common Law System) காலனித்துவ காலத்தில் இந்தியாவில் சட்டமாகக் கொண்டு வரப்பட்டு, இந்திய சட்ட அமைப்பின் அடிப்படையாக அமைந்தன என்று கூறினால் அது மிகவும் பொருத்தமானதாகும்.

**ஐரோப்பிய கிறிஸ்தவச் சட்டத்தின் அடித்தளம் மேற்கத்தியத் தத்துவம்**

காலனித்துவ கால சட்டங்களை உருவாக்கியவர்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவப் பின்னணியைக் கொண்டிருந்தாலும், அவர்கள் பயன்படுத்திய சட்ட அடித்தளம் முன்குறிப்பிட்டது போல் வெறும் கிறிஸ்தவ மத அடிப்படையில் எழுதப்பட்டது அல்ல. மாறாக ஆழமான தத்துவம், சட்டத் தத்துவங்கள் மற்றும் சட்டக் கோட்பாடுகள் ஆகியவற்றை அடித்தளமாக வைத்து சமூக நிர்வாகத்துக்காக எழுதப்பட்டவை என்பது உண்மை.

மேற்கத்தியத் தத்துவம் என்பது பெரும்பாலும் ஐரோப்பா மற்றும் மேற்கத்திய நாடுகளில் உருவான சிந்தனை மரபாகும். மேற்கத்தியத் தத்துவம் மனித வாழ்க்கை, பகுத்தறிவு, உண்மை, அறிவு, அறநெறி, அரசியல், சட்டம் போன்ற அடிப்படை கேள்விகளுக்கு பதில் தேடி உண்மையை அறிய முயலும் ஓர் அறிவியல் ஆகும். ஆகவே, கிறிஸ்துவுக்கு முன்னர் வாழ்ந்த கிரேக்க சிந்தனையாளர்கள் யார் என்பதைப் பற்றியும், அக்கால சிந்தனைக் குழுக்கள் என்ன என்பதைப் பற்றியும் இவை எவ்வாறு மேற்கத்தியத் தத்துவம் உருவாக அடித்தளமிட்டன என்றும் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். மேற்கத்தியத் தத்துவத்தை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம்.


❖**பண்டைய காலம்** (கிமு 650 – கி.பி 476) சாக்ரடீஸுக்கு முன் வாழ்ந்த கிரேக்கச் சிந்தனையாளர்கள் முதல் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் வரை உள்ள காலக்கட்டம்.

❖**இடைக்காலம்** (கி.பி 476 1637) அதாவது கிறிஸ்தவ இறையியலின் தாக்கம் அதிகமாக உள்ள காலம்.

❖**நவீன காலம்** (17–19ஆம் நூற்றாண்டுகள்) ரெனே டெகார்ட், ஜான் லாக், டேவிட் ஹியூம் ஆகியோரின் பகுத்தறிவு வாதம் மற்றும் அனுபவ வாதம் அதிகமாக பேசப்பட்ட காலக்கட்டம்.

❖**தற்காலம்** 20 ஆம் நூற்றாண்டு முதல் தற்போது வரையிலான காலக்கட்டம். இது பல தத்துவப் போக்குகளை உள்ளடக்கிய காலக்கட்டம் ஆகும்.

மேற்கத்தியத் தத்துவத்தின் தோற்றத்திற்கு அடித்தளமாக அமைந்தது பண்டைய கிரேக்க தத்துவஞானிகளின் சிந்தனைகளும் மற்றும் அவர்களைத் தொடர்ந்து உருவான பல்வேறு சிந்தனைக் குழுக்களும் ஆகும். பின்னாட்களில் சட்டத் தத்துவங்கள் மற்றும் சட்டக் கோட்பாடுகள் உருவாகி மேற்கத்தியத் தத்துவத்தின் உருவாக்கத்திற்கு வலுசேர்த்தன என்பதே உண்மை. ஆகவே கிரேக்க தத்துவஞானிகளைப்பற்றியும் அவர்களின் தத்துவார்த்தமான பங்களிப்பு பற்றியும் பார்ப்பது மிகவும் அவசியமாகிறது. ●



# உன்னையே நம்பு

அசந்த நேரம்
அடுத்தவன் காலை
அசைத்துப் பார்க்கும்
அகிலமடா இது

ஆயிரம் ஜாதகம்
ஆராய்ந்த பின்னும்
திருமண வாழ்வு
திசை மாறுவதில்லையா?

பத்து மாதம்
சுமந்தவள் என்பதால்
பெற்றவள் உனக்கு
சுவாசிக்க முடியுமா?

விழியைப் பணத்துக்கு
வாங்கிப் பொருத்தலாம்
வழியை நீ தானே
பார்த்தாக வேண்டும்?

கொத்தனார் கட்டியா
எழும்பின மலைகள்
தச்சர்கள் செதுக்கியா
விரிந்தன மலர்கள்?

அச்சாணி இல்லாமல்
சுற்றலையா பூமி
ஆதாரம் தொடாமல்
படரலையா மின்னல்?

உன் கண்ணால் தான்
உனக்குப் பார்வை
உன் காலால் தான்
உனக்குப் பயணம்

உன் நாவால் தான்
உனக்கு வார்த்தை
உன்னை நம்பினால் தான்
உனக்கு வாழ்க்கை...!

நல்லாசிரியர் கவிஞர் **எல். பிரைட்**



Scanned with OKEN Scanner



வாழ்வியல் செய்தி

# வாழ்வாங்கு வாழ கல்வியைக் கற்போம்

அருள்சகோதரி. **ஜெனஸ்**
மானாமதுரை

2026 - ஆம் கல்வி ஆண்டில் புது சிந்தனைகளுடன் சிறகடித்துக் கொண்டிருக்கும் என் இனிமையான மாணவக் கண்மணிகளே...

**உங்களுக்கான கதை இதோ...**

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் இமயமலைப் பகுதியில் ஏறிக் கொண்டிருந்தார் பாதையின் நடுவில் மலைச் சரிவில் ஒர் இளைஞன் அமர்ந்திருந்தான். அருகில் சென்று விசாரித்த போது, நிறைய தூரம் நடந்து விட்டேன். மிகவும் களைப்படைந்துவிட்டேன். இனிமேல் ஒர் அடி கூட என்னால் மேலே ஏற முடியாது என்றான். அவன் சொன்னதை கேட்டு சகோதரனே...

களைப்பு மிகுதியால் வந்திருக்கின்ற இந்த எண்ணம் சரிதான். ஆனால் உன் பாதத்துக்குக் கீழே தெரிகின்ற, நீ இதுவரை கடந்து வந்திருக்கின்ற அந்த நீளமான பாதையைப் பார். அவ்வளவு தூரத்தையும் கடந்து வந்தது. இந்த பாதங்கள் தானே. இன்னும் சிறிது தூரம் தான், அதையும் நீ கடந்துவிட்டால் மீதி பாதைகளும் உன் காலடியிலே, என்றார்.

"பல வருட உழைப்பைப் பார்த்தவரைப் பற்றிக் கொள்ளாமல் விடாது பண்பட்ட புகழ்"

ஆம் பள்ளிப்பருவங்களானாலும் சரி, கல்லூரிக் காலங்களானாலும் சரி நம்முடனிருந்து நம்மை ஊக்கப்படுத்தும் சக்தியாக இருந்து இயக்குவது கல்வி. இக்கல்விதான் நம் மனதில் கொண்ட இலட்சியங்களை அடைவதற்கு உறுதுணையாக இருக்கின்றது. இக்கல்விப் பயணத்தில் சோர்வுகளும், பின்வாங்குதலும் குடும்பச் சூழலும், பிற தடைகளும் நம்மை ஆட்கொண்டாலும் "இன்னும் சிறிது தூரம்தான்" என்ற உந்து சக்தியை உள்ளத்தின் ஆழத்தில் கொண்டு இலட்சியத்தை அடைந்திட முன்னேறுங்கள்...!

**சாதிக்கத் துடிக்கும் சாதனையாளர்களே...!**

இருளை நீக்கும் ஒளி கல்வி
இதயத்தில் தீபம் ஏற்றி
வாழ்வாங்கு வாழ
வழிகாட்டும் பாதை கல்வி
எழுத்தறிவு மட்டுமல்ல
எண்ணங்களின் சுதந்திரம் அது
சுயநலத்தைத் தாண்டி
சமூகத்தைச் சிந்திக்க செய்வது
கைகளுக்கு வேலை
கண்ணுக்கு கனவு
இதயத்திற்கு தைரியம்
அனைத்தையும் சேர்த்து தரும் கல்வி

இந்த விலை மதிப்பில்லா - கல்வியை தரமுடனே கற்று வாழ்வாங்கு வாழ உங்களை வாழ்த்துகிறேன்.



Scanned with OKEN Scanner



## புனித வின்சென்ட் தே பவுல் சபை
## மத்திய சபை–சிவகங்கை



# 2026-ம் ஆண்டு மே மாத பணிகள் விபரம்

❖ சிவகங்கை மத்திய சபை, இளையான்குடி வட்டார சபை கூட்டமானது 3.5.2026 அன்று இளையான்குடி பங்கு ஆலய வளாகத்தில் அமைந்துள்ள புனித வின்சென்ட் தே பவுல் சபை அலுவலகத்தில், காலை திருப்பலி முடிந்தவுடன் ஆரம்பமானது. ஆன்மீக ஆலோசகர் அருள்பணி அமலன் அவர்கள் முன்னிலையிலும் மத்திய சபை தலைவர் சகோ. பெர்னாட்ஷா மற்றும் மத்திய சபை செயலர் சகோ. அலெக்ஸாண்டர் அவர்கள் முன்னிலையிலும் புதிய வட்டார சபை பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு ஆரம்பமானது. வந்திருந்த அனைத்து கிளை பொறுப்பாளர்களும் ஒரு மனதாக தலைவராக சகோ. செல்லதுரை அவர்களையும் துணைத்தலைவராக சகோ. அருள் பிரகாசம் அவர்களையும் செயலராக சகோ. இருதய ஜேம்ஸ் அவர்களையும் பொருளாளராக சகோ அருள் நித்தியா அவர்களையும் தேர்ந்தெடுத்தோம். தேர்ந்தெடுத்தவர்கள் சபை பொறுப்பை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதையும் மகிழ்வுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

❖ கல்லல் வட்டார சபையின் 51 வது காலாண்டு கூட்டம் கல்லல் தூய வேதபோதக அரசி கிளைச்சபையில் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு தொடங்கியது. கூட்டத்திற்கு கல்லல் பங்கு தந்தை அருள்பணி கமல்ராஜ் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்கள், மத்திய சபையிலிருந்து செயலர் சகோ.அலெக்சாண்டர், பொருளர் சகோ.அமிர்தசாமி, திட்ட அலுவலர் சகோ.சூசைராஜ் ஆகியோர் வருகைபுரிந்து சிறப்புரை வழங்கினார்கள். கல்லல் வட்டாரசபை செயலர் சகோ. மைக்கேல் கூட்ட நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். வட்டார சபை தலைவர் சகோ. அருளானந்தம் அவர்கள் கோத்தகிரியில் நடைபெற்ற மண்டல ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தலைவர்கள் பேசிய கருத்துக்களை விரிவாக தொகுத்து வழங்கினார். கிளைச்சபைகளிலிருந்து தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் வருகைபுரிந்து கிளைச்சபையின் மூன்று மாத செயல்பாட்டு அறிக்கையை வாசித்து சமர்ப்பித்தார்கள். கூட்டம் மதிய உணவுடன் இனிதே நிறைவுற்றது.

சிவகங்கை மறைமாவட்டம் ஆர். எஸ். மங்களம் வட்டார புனித வின்சென்ட் தே பவுல் சபையின் முதலாம் காலாண்டு கூட்டம் (2026-2027) 17.05.2026 ஞாயிறு முத்துபட்டிணம் புனித வனத்து அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்றது. தூய ஆவியானவர் பாடலுடன் தொடக்க செபத்துடன் கூட்டம் ஆரம்பம் ஆனது. தலைமை சகோ. ஸ்தனிஸ்லாஸ் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். பங்கு பணியாளர் அருட்பணி அமல்ராஜ் அவர்கள் முன்னிலையில், கல்வி மற்றும் திட்டகுழு தலைவர் சகோ. சூசைராஜ், மேனாள் மத்திய சபை தலைவர் சகோ. அந்தோணி ராஜகுமார், வட்டாரசபை செயலர் சகோ. ஜான்பிரிட்டோ, வட்டார பொருளர் மற்றும் கிளைசபையின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். சகோ. அருள்ராஜ் முத்துபட்டிணம் கிளைசபை தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள் பின்பு கடந்த கால கூட்ட அறிக்கையை அந்தோணி ராஜகுமார் வட்டார சபை செயலர் அவர்கள் வாசித்தார்கள். பின்பு வட்டாரசபை பொருளாளர் சகோ. ஜான்பிரிட்டோ அவர்கள் வட்டார சபையின் வரவு செலவு அறிக்கையை சமர்பித்தார்கள்.அதன்பின் அனைத்து கிளைசபையின் செயல்அறிக்கை சமர்பிக்கபட்டது.பின்பு வட்டார சபையின் சார்பாக வழங்கப்படும் கல்வி நிதி 5000 ரூபாய் இரண்டு மாணவ மாணவியர்க்கு வழங்கபட்டது சகோ. தனிஸ்லாஸ் முத்துபட்டினம் கிளைசபை செயலர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



Scanned with OKEN Scanner



# கண்ணில் ஒளியாய், கனவுகளை நினைவாக்கும் கல்விச்செல்வம்

அருட்பணி. **பிலோமோன், திச**
உதவி பங்குத்தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், ஆவடி, சென்னை.

"கல்வி" இந்த ஒரு சொல்லுக்குள் எத்தனை தாய்களின் கண்ணீர் மறைந்து கிடக்கிறது. எத்தனை தந்தைகளின் வியர்வை கலந்து கிடக்கிறது. எத்தனை குடும்பங்களின் கனவுகள் உயிர்பெற்று நிற்கின்றன. ஒரு வீட்டில் குழந்தை பிறக்கும் போது, அந்த குழந்தையோடு சேர்ந்து ஒரு தாயின் கனவும் பிறக்கிறது. “என் மகன் நல்ல நிலைக்கு வர வேண்டும்”, “என் மகள் யாரிடமும் கைகூப்பி நிற்காத வாழ்க்கை வாழ வேண்டும்” என்ற அமைதியான ஜெபம் ஒவ்வொரு பெற்றோரின் இதயத்திலும் எழுகிறது.

ஒரு தாய் தனது பிள்ளையை பள்ளிக்கு அனுப்பும் போது, அவள் அனுப்புவது ஒரு குழந்தையை அல்ல தனது எதிர்கால நம்பிக்கையைத்தான். ஒரு தந்தை வெயிலில் நின்று உழைக்கும் போது, அவர் சம்பாதிப்பது வெறும் பணமல்ல. தனது பிள்ளையின் நாளைய வாழ்வைத்தான். அதனால்தான் கல்வி ஒரு பாடப்புத்தகம் அல்ல,அது ஒரு குடும்பத்தின் கண்ணீரால் எழுதப்பட்ட வரலாறு.

“**கனவு காணுங்கள்**” மாமேதை ஏ. பி. ஜே. அப்துல் கலாம் கூறியுள்ளார். "**கனவு காணுங்கள் அந்த கனவு உங்களை உறங்க விடாததாக இருக்கட்டும்**". ஆனால் அந்த கனவுகளை நனவாக்கும் சக்தி கல்வியில்தான் உள்ளது. பணம் ஒருநாள் குறைந்து போகலாம், சொத்து ஒருநாள் அழிந்து போகலாம். ஆனால் கல்வி என்ற செல்வம் ஒருபோதும் அழியாது. ஒரு ஏழை வீட்டில் பிறந்த குழந்தை கூட கல்வியால் உலகமே பாராட்டும் உயரத்திற்கு சென்று நிற்க முடியும். ஏனெனில் கல்வி மனிதனை மாற்றுவதல்ல அவரின் தலைமுறையையே மாற்றும் சக்தி கொண்டது. ஒரு தாயின் அமைதியான போராட்டம் ஒரு உண்மை வாழ்க்கையை நினைவுபடுத்தும் நிகழ்வு.

ஒரு தாய் இருந்தார், அவருக்கு பெரிய சொத்துகள் இல்லை. ஆனால் ஒரு பெரிய கனவு இருந்தது “என் மகன் படித்து பெரிய மனிதராக வேண்டும்.” அதற்காக அவர் ஒரு நாளில் இருபது மணி நேரம் உழைத்தார். வீடுகளில் வேலை செய்தார், பாத்திரம் கழுவினார், துணி துவைத்தார், இரவு வீடு திரும்பும்போது கைகள் நடுங்கின. ஆனால் மனம் மட்டும் உடையவில்லை. அவருக்காக



Scanned with OKEN Scanner

அவர் எதையும் வாங்கிக் கொள்ளவில்லை. புதிய சேலை வேண்டுமென்ற ஆசையையும் அடக்கிக் கொண்டார். பசியுடன் உறங்கிய இரவுகளும் இருந்தன. ஆனால் தனது மகன் பசியுடன் படுக்கக் கூடாது என்பதில் மட்டும் உறுதியாக இருந்தார். அவர் உறங்கியது வெறும் நான்கு மணி நேரம். ஆனால் அந்த நான்கு மணி நேர உறக்கத்திலும் கூட தனது மகனின் எதிர்காலத்தையே கனவு கண்டார்.

ஒருநாள் அந்த மகன் பெரிய பதவியில் அமர்ந்திருந்தார். அனைவரும் அவரை பாராட்டினர். ஆனால் அவர் மேடையில் நின்று கூறியது ஒரே ஒரு வார்த்தை: "என் வெற்றியின் பின்னால் என் தாயின் கண்ணீரும் உழைப்பும் இருக்கிறது." அந்த நிமிடத்தில் அந்த தாய் அழுதார் துயரத்தால் அல்ல தனது தியாகம் வீணாகவில்லை என்ற மகிழ்ச்சியால்.

இன்றைய சமுதாயம் மறந்து கொண்டிருக்கும் உண்மை இன்று பல பிள்ளைகள் பெற்றோரின் உழைப்பை புரிந்து கொள்ளாமல் வாழ்கின்றனர். படிப்பை ஒரு சுமையாக பார்க்கின்றனர். அலைபேசி, பொழுதுபோக்கு, தேவையற்ற ஆசைகள், இவைகளில் நேரத்தை இழக்கின்றனர். ஆனால் ஒரு முறை அவர்கள் தாயின் கைகளை கவனித்து பார்த்தால் புரியும். அந்த கைகளில் உள்ள காயங்கள் சாதாரண காயங்கள் அல்ல, அது பிள்ளையின் எதிர்காலத்திற்காக சுமந்த சிலுவைகள்.

ஒரு தந்தையின் முகத்தில் தெரியும் சோர்வு சாதாரண சோர்வு அல்ல, அது குடும்பத்தின் கனவுகளை சுமந்த உழைப்பின் அடையாளம். கல்வி வாழ்க்கையை மாற்றும் ஒளி. ஒரு மனிதன் எப்படி பிறந்தார் என்பது முக்கியமல்ல. ஆனால், அவர் எப்படி வாழ்கிறார் என்பதே முக்கியம். ஏழ்மையில் பிறந்தாலும் உயரத்தில் வாழ முடியும். தோல்வியில் ஆரம்பித்தாலும் வெற்றியில் முடிக்க முடியும். அதற்கு தேவையான மிகப்பெரிய ஆயுதம் கல்வி.கல்வி ஒரு வேலைக்காக மட்டும் அல்ல மனிதனை மனிதனாக மாற்றுவதற்காக. கல்வி கற்ற ஒருவர் தனது குடும்பத்தை உயர்த்த முடியும். ஒரு குடும்பத்தை உயர்த்தும் ஒருவர் சமுதாயத்தையும் மாற்ற முடியும்.

ஒரு தாய் தனது கண்ணீரை மறைத்து சிரிப்பாள் ஒரு தந்தை தனது வலியை மறைத்து உழைப்பார் ஏன் தெரியுமா?"என் பிள்ளை நான் பட்ட கஷ்டத்தை படக்கூடாது" என்பதற்காக. இதற்கு எனது தாயும் தந்தையும் மாபெரும் எடுத்துக்காட்டு. அதனால் ஒவ்வொரு மகனும் மகளும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று:"உன் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் உன் பெற்றோரின் வியர்வை உலர்ந்து கிடக்கிறது."அவர்களின் கனவை வீணாக்காதீர்கள், கல்வியை நேசியுங்கள்,கனவு காணுங்கள், உழையுங்கள். உங்கள் வாழ்க்கையை மட்டுமல்ல உங்கள் பெற்றோரின் கண்ணீரையும் வெற்றியாக மாற்றுங்கள். ஏனெனில், கல்வி என்பது வெறும் செல்வமல்ல ஒரு தாய் தந்தையின் உயிரோடு கலந்த நம்பிக்கை. ●

**திருமண முன்தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்**

| எண் | தேதி | கிழமை | இடம் |
|---|---|---|---|
| 1 | 13.06.2026 - 14.06.2026 | சனி, ஞாயிறு | சாயல்குடி |



Scanned with OKEN Scanner

## தொடர் விவிலியப் போட்டி - ஜூன் 2026

**இரண்டாம் சுற்று : திருப்பாடல்கள் 81-150, நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல்கள் வரை**

### I. ஒரே வார்த்தையில் விடையளி 5x1=5

1. வானங்கள் ஆண்டவரது எவற்றை அறிவிக்கின்றன?
2. திருச்சட்டத்தை கைவிடும் தீயோரை பார்க்கும்போது இவை என்னை கவ்விக் கொள்கின்றன?
3. ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் எதைப்போல் என்றும் அசையாது இருப்பர்?
4. நீதிமான்கள் உமது பெயருக்கு எவற்றைச் செலுத்துவார்கள்?
5. உன் அடியாரின் பிள்ளைகள் எவ்வாறு வாழ்வர்?

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக 5x2=10

1. ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர்க்கு காட்டும் பேரன்பு ............, .................. போன்று உயர்ந்தது.
2. உன் நியமங்களைக் குறித்து நான் ................., உன் நெறிகளில் என் .................. செலுத்துவேன்.
3. ஆண்டவராகிய அரசரின் முன்னே .................... முழங்கி ............... ஊதி ஆர்ப்பரித்துப் பாடுங்கள்.
4. காலங்களைக் கணிக்க ...................... நீர் அமைத்தீர். ................... தான் மறையும் நேரத்தை அறிவான்.
5. ........................ தவமும் .................... என என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாய் உள்ளது.

### III. சரியா? தவறா? கண்டுபிடி. 5x1=5

1. இடக்கையால் அவர் என் தலையைத் தாங்கிக் கொள்வார்; வலக்கையால் என்னைத் தழுவிக் கொள்வார்.
2. பூட்டியுள்ள தோட்டம் நீ; என் தங்காய், மணமகளே, பூட்டியுள்ள தோட்டம்; முத்திரையிட்ட கிணறு நீ!
3. அவரது தலை பசும்பொன்; தலைமுடி சுருள்சுருளாய் உள்ளது. காகம்போல் கருமைமிக்கது.
4. அன்பே! இன்பத்தின் மகளே! நீ எத்தனை அழகு! எத்தணைக் கவிர்ச்சி!
5. "என் காதலரே!" விரைந்து ஓடிடுக! கலைாமன் அல்லது மரைமான் குட்டிபோல் நறுமணம் நிறைந்த மலைகளுக்கு விரைந்திடுக.

### IV. தேடிக் கண்டுபிடி 5x1=5

1. ஒளி இருளைவிட மேலானதாய் இருப்பதுபோல, ஞானமும் மதிகேட்டைவிட மேலானதாய் இருக்கக் கண்டேன்.
2. ஒவ்வொன்றையும் உலகில் கண்டேன், நேர்மையும் நீதியும் இருக்கவேண்டிய இடங்களில் அநீதியே காணப்படுகிறது.
3. கனவுகள் பல வரலாம்; செயல்களும் சொற்களும் எத்தனையோ இருக்கலாம். நீயோ கடவுளுக்கு அஞ்சி நட.
4. ஒரு நகருக்குப் பத்து ஆட்சியாளர் தரும் வலிமையைவிட, ஞானமுள்ளவருக்கு ஞானம் மிகுதியான வலிமைதரும்.
5. குழியை வெட்டுவார் அதில் தாமே வீழ்வார், கன்னமிடுவோரைக் கட்டுவிரியன் கடிக்கும்.



Scanned with OKEN Scanner

## V. குறுக்கெழுத்துப் போட்டி

10x1=10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | |
| | | | 3 | | |
| 4,5 | | | | | |
| | | | | 6 | |
| | | 7 | | | |
| | 8,9 | | | | 10 |

**i). இடமிருந்து வலம்**

4. ஆண்டவரே! என் ......................... காவல் வைத்தருளும்.
7. புறணி கேட்பது பலருக்கு அறுசுவை ............. உண்பது போலாம்.
8. ஒருவர் உரைக்கும் ................ என்றும் நிலைக்கும்.

**ii). வலமிருந்து இடம்**

1. ஞானமுள்ளோர் இவற்றைக் கேட்டு அறிவில் இன்னும் .................... அடைவர்.
3. .................. செய்தவரைத் தண்டிக்கும் நீதிபதிக்கு நலமுண்டாகும்.
6. நான் செல்லும் வழியில் அவர்கள் எனக்குக் .................... வைத்துள்ளார்கள்.

**iii). மேலிருந்து கீழ்**

2. குதிரைக்குச் .....................
5. பண்டைய ................. நான் நினைத்துக் கொள்கின்றேன்.

**iv). கீழிருந்து மேல்**

9. அவர் தம் மக்களின் ஆற்றலை ................... செய்தார்.
10. பிறம்பும் கண்டித்துத் திருத்துதலும் ..................... புகட்டும்.

## VI. பொது அறிவு

5x1=5

1. திருவிவிலியத்தின் மையக்கருத்து என்ன?
2. இறைஏவுதலைப் பற்றி விவிலியம் என்ன கூறுகிறது?
3. புதிய ஏற்பாட்டில் இறைவாக்கு நூல் எது?
4. அருளடையாளங்களின் பிறப்பிடம் எது? அதனைக்கூறும் இறைவார்த்தையை எழுதுக?
5. திருப்பலி எது நாள் வரை நடைபெறும்?

## குறிப்பு

1. தொடர் விவிலியப் போட்டி ஆனந்த கங்கைத் தூது இதழில் வெளிவரும்.
2. விவிலியத்தைப் படித்து பயன்பெறவும், போட்டியில் ஆர்வத்தோடு அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவும் அழைக்கிறேன்.
3. ஆனந்த கங்கைத் தூது இதழில் ஒரு மாதம் கேள்வியும் பிரதி மாதம் அதற்கான பதில்களும் வெளிவரும்.
4. தொடர் விவிலியப்போட்டி ஆறு சுற்றுகளாக வெளிவரும். வழக்கம்போல பரிசுகள் மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும் வழங்கப்படும்.
5. பெயர், முகவரி, தொலைபேசி எண், பங்கு முதல் பக்கத்தில் குறிப்பிடல் அவசியம்.
6. விடைகள் யாவும் நூல், அதிகாரம், வசனம் இவைகள் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
7. விடைகள் **ஜுன் 20.06.2026-ம் தேதிக்குள்** அனுப்பப்படல் வேண்டும்
8. குறிப்பிட்ட நாளுக்குள் வந்து சேராத விடைத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. விடைகள் தனித்தாளில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி : அருள்பணி. **ஜீவன் கிரிசாந்த்,** செயலர், கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு வியான்னி அருள்பணி மையம், மதுரை ரோடு, சிவகங்கை - 630 561. **செல் : 63821 92028**

நீ.மொ. 17:25

மதிகெட்ட மகனால் தந்தைக்குக் கவலை; பெற்ற தாய்க்குத் துயரம்.



Scanned with OKEN Scanner

"Thanks to the God, who gives victory through our Lord Jesus Christ" 1 Corinthians 15:57

# ST. ANNE'S MATRIC HR. SEC. SCHOOL
## AKKALMADAM. Cell : 94890 92737

*for the Outstanding Achievement in the*

## PUBLIC EXAMINATION 2025 - 2026

# Congratulations

### பன்னிரெண்டாம் வகுப்பு




1. First mark - 576 Arul Mispa Y- Maths Computer group

2. Rokshana Fathima A- 565 Commerce group

3. Sri Brundha M- 541 Bio - Maths group

3. Mariya Asna K -541 Bio - Maths group

### 10-ஆம் பொதுத்தேர்வில் தீவில் முதலிடம்!



RINOFY J 494/500

ANTONSIYA T 469/500

BENIN J 469/500

BHARATHI V 463/500

KIREPSAN N 463/500

**தீவு அளவில் மிகக்குறைந்த கட்டணத்தில்
அனுபவமிக்க ஆசிரியர்களால்
தரமான கல்வி வழங்கும் ஒரே பள்ளி எமது
(திருச்சி அன்னாள் சபை அருட்சகோதரிகளால் நடத்தப்படும்)
செயின்ட் ஆன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அக்காள்மடம்**

**LKG to IX and XI வகுப்புகளுக்கு அட்மிஷன் நடைபெறுகிறது**

# புனித யாகப்பர் மேல்நிலைப் பள்ளி

தங்கச்சிமடம் - 623 529
இராமநாதபுரம் மாவட்டம்.

100 தேர்ச்சி

## CONGRATULATIONS

Achievers

பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு



1st KABRIYEL JOSVA.A 565 (comp-maths)
2nd MELKA. A 539 (commerce)
3rd MARIA LISHOBA.S 527 (commerce)
4th ROOPA SRI.S 513 (comp-maths)
5th RITHIKA.J 511 (commerce)
6th SUJI SANTRA. M 508 (bio-maths)

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு



A.DHASNI 471
L.JEFFY 470
X.THIBURSHA MATTALIN 462
T.PERIK LIBANONA 456
I.MANCY 456
N.SVETLENA 453
D.RIYO 440



A.ARUL PRIJO 433
M.MUGESH KANNAN 431
M.SHAM 429
P.ASHIFA 417
M.SAKTHI UMESH 411
A.HEVANSHI 408
A.MARIYA NISHAN 403
A.KENLI FEBI 400

2026 - 2027ஆம் ஆண்டிற்கான அட்மிஷன் நடைபெறுகிறது

# லசால் பாய்ஸ் டவுன் ITI
## மதுரை

திறமைக்கு திசை,
எதிர்காலத்திற்கு வெற்றி!

அட்மிஷன்
**துவக்கம்**
2026-27

கல்வி ஆண்டுக்கான
# மாணவர் சேர்க்கை 2026-27
நடைபெறுகிறது.







### எங்கள் சிறப்புகள்

- நவீன பயிற்சி வசதிகள்
- அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்கள்
- 100% வேலை வாய்ப்பு நோக்கம்
- ஒருங்கம், திறமை, தொழில் முனைவு பயிற்சி

**திறமைக்கு பயிற்சி, பயிற்சிக்கு வேலை!**
தொழில்நுட்பத்தில் வல்லவர்கள் உருவாகும் இடம்.

### பயிற்சி பிரிவுகள் (Trades)

**மின் பணியாளர்** (Electrical Technician)



10th Pass / Fail & above
1 வருடம்

**கடைசல்ர்** (Lathe Operator)



10th Pass / Fail & above
1 வருடம்

**வெல்டிங் பணியாளர்** (Welding Technician)



10th Pass / Fail & above
1 வருடம்

**இயற்கை விவசாயம்** (Organic Farming)



10th Pass / Fail & above
1 வருடம்

## 100% வேலை வாய்ப்பு நோக்கம்.

- குறைந்த கல்விக் கட்டணம்
- தங்குமிடம் மற்றும் உணவு வசதி உள்ளது
- சத்தான உணவு வழங்கப்படும்

தொடர்புக்கு:
9095881636
9688010015
9597332260

மாநில அரசின் அங்கீகாரம் பெற்றது.
எண்: ISI/21427/2002.

Scanned with OKEN Scanner



# அருட்தந்தை **சிங்கராயரின்** OFM

## விண்ணக வாழ்வின்

## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு : 06.11.1970
அருட்பொழிவு : 27.04.1997
விண்ணகப் பிறப்பு : 06.06.2021

ஐந்து வருடங்கள் ஆகிவிட்டதடா மகனே!
எங்களை விட்டுப் பிரிந்து
ஆனால் நேற்று போல நெஞ்சை நெருடுகிறது
எங்கள் கண்களில் ஒளியாய் பிறந்த நீ
எங்கள் வாழ்வின் பெருமையாய் வளர்ந்த நீ
இன்று நினைவுகளாய் மட்டுமே மீதமிருக்கிறாய்
அப்பா, அம்மா என்று அழைத்த அந்த குரல்
இன்னும் எங்கள் காதுகளில் ஒலிக்கிறது.
அதை மீண்டும் ஒருமுறை கேட்க முடியாதது
எங்கள் உயிரையே உருக்குகிறது
நாங்கள் தாங்க முடியாத கஷ்டங்களை
அடைந்த போது உன் சிரிப்பால் மறக்க வைத்தாய்
இன்று அந்த சிரிப்பு இல்லாமல்
எங்கள் வாழ்வு வெறுமையாய் இருக்கிறது.
கடவுளின் கரங்களில் அமைதியாய் உறங்கும்
எங்கள் அன்பு மகன் சிங்கராயரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்



**என்றும் உங்கள் நினைவில் வாழும்**

அன்புப் பெற்றோர் : **அற்புதம், ஜெபமாலை**
உடன் பிறந்தோர் : **சார்லஸ், கென்னடி, ஆல்பர்ட், சாந்தி**

பரமக்குடி